# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. III Issue 2 May 2013

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்


இம்மாதச் செய்தி ........ 2

லைப் டிவைன் ........ 3

சாவித்ரி ........ 16

யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 18

பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 23

அஜெண்டா ........ 28

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ........ 30

மூடநம்பிக்கையும் அவற்றிலிருந்து விடுபடுதலும் ........ 42

பெண்ணின் பெருமை ........ 62


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

பொறுமையாகக் காத்திருப்பது யோகத்தின் சமநிலை.

பொறுமை வாழ்வைக் கடக்கும்.

பொறுமை முடிவானது.

பொறுமை எதையும் பொறுமையால் சாதிக்கும்.

## இம்மாதச் செய்தி

**சொல்லி சாதிப்பது**

**சொல்பம்,**

**சொல்லாமல் சாதிப்பது**

**அபரிமிதம்.**





# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 24. ஜடம்

மரபு வாழ்வைக் கட்டுக்கடங்காத பேயெனக் கருதுகிறது. இது சரியல்ல. சொல்லிலகப்படாத கனவு எனவும் கூறுகிறது. இதுவரை நாம் செய்த ஆராய்ச்சி இவை தவறு என விளக்கமாகக் கூறுகிறது. மற்றும் பலர் வாழ்வை உண்மையென அறிவர். அவர் வாழ்வை மோசமான உண்மையாகக் காண்கின்றனர். உண்மை வேறு. வாழ்வு பிரம்மாண்டமான சத்தியம். கடல் போன்ற கருத்து நிறை கருவூலம். பிரம்மம் சிருஷ்டியில் அனைத்துமானான். அந்த அனைத்தும் வாழ்வாகும். அதனடிப்படைச் சட்டம் இப்பொழுது நமக்குப் புலனாகிறது. அதன் அந்தரங்க வலிமை உலகை உட்கொண்டது. சிறப்பின் சிகரம் நம்மை நிமிர்ந்து பார்க்கும்படி அழைக்கிறது. நம் திருஷ்டியின் முடிவில் வாழ்வென்பது இறைவன் இகவுலகில் மலரும் மகத்தான அரங்கம் எனக் காண்கிறோம். வாழ்வுக்கடியில் வேறொரு சட்டம் உண்டு. நாம் அதை போதுமான அளவு கருதவில்லை. அது ஜடம். அது வாழ்வின் பீடம். அதனின்று ஆலவிருக்ஷமாக வாழ்வு பரிணாம வளர்ச்சி பெறுகிறது. மரம் விதையினின்று எழுகிறது. ஜடத்தினின்று வாழ்வு உற்பத்தியாகிறது. இது ஜடமான சட்டம். மனம், வாழ்வு, உடல் ஆகியவற்றை நம்பி உள்ளன. விரியும் நறுமலர் ஜீவியம் மனத்தினின்று எழுவதைப் பொருத்தது. பல வகையிலும் பெருகி

தன் மூலமான சத்தியத்தை நாடி உயர்ந்தெழுகிறது. இவை அனைத்தும் சத்திய ஜீவிய வாழ்வு நிலை என்ற அரங்கம் பரவி நிற்கும் பாங்கில் நிகழ்கின்றன. இதுவும் நிபந்தனைக்குட்பட்டதாகத் தெரிகிறது. உடல் எனும் உணர்வு நிறைந்த எல்லைக்குள் வாழ்வு இயங்கும் நிர்ப்பந்தம் பெற்றுள்ளது. அதுவே ஜடம் என்ற அஸ்திவாரம். இதன் முக்கியம் நாம் அறிவது. அக்காரணத்தால் மனிதன் உடலை உருவாக்கியுள்ளான். அல்லது அவன் உடலும், சிகரமான மூளையும் பெற்றுள்ளான் எனக் கூறலாம். இவை இரண்டும் வளரும் ஒளியைப் பெற்று பயனடைபவை. விலங்கிலிருந்து இவ்வழி மனிதன் இதுவரை உயர்ந்தது. அவன் அவ்வழி பெற்ற மனித நிலை தெய்வீகமானது. அவன் பெற்ற உடல் எனும் கருவியின் கடமை நிறைந்த செயலது. உள்ளுறை ஜீவனிலும், எண்ணத்திலும் மட்டுமல்லாமல் மனித வளர்ச்சி வாழ்வில் மையமாக நிலைக்கிறது. வளர்ந்து மனிதன் தெய்வீகம் பெறுகிறான். இல்லையேல் வாழ்வை எதிர்பார்ப்பது வீண். அல்லது மனிதன் தெய்வீகக் கருவியில்லை. வாழ்வை ரத்து செய்தால், அதன் கரு கருகிவிடும். இது உண்மையானால் பூவுலக வாழ்வு சச்சிதானந்தத்தை எட்டலாம். இது தன்னை அழித்து பெறும் இலட்சியம். அதாவது மனம், உயிர், உடல், ஆத்மாவினின்று விலக வேண்டும். தூய்மையான அனந்தம் முடிவாகும். வாழ்வு தன்னையறிந்து வளரும் பாதைக்கு விதிக்கப்பட்ட எல்லையுண்டு பொருள் பெறும். மற்ற ஜீவராசிகளினின்று மனிதனை சிறப்பாக விலக்கிக் காட்டிய சக்தியிது. மற்றவற்றை விலக்கி முன் வந்த மனிதன் இப்பொழுது தான் விலகி வேறொரு நிலைக்கு வழி விட வேண்டுமென்றாகிறது.

உடல் பெரிய சிரமமான தடை. இதை ஆரம்பத்திலிருந்து அறிவோம். இது தாண்ட முடியாத தடை. தடையே மலையானது. எனவே பக்தர்கள் தங்கள் தடையை விதித்தனர். ஆன்மீக சித்தியின் தீவிரம் ஆர்வத்தை எழுப்புகிறது. ஆர்வம் அதிகமானால் தடை தீவிரமாகும். தவசிக்கு உலகம் வெறுப்பாகிவிட்டது. வெறுப்பைத்



தத்துவமாக அறிய ஒரு சட்டத்தை நாடுகிறான். அது உடலின் மீது வெறுப்பாயிற்று. குறிப்பான வெறுப்பின் சின்னமாக உடல் மாறிற்று. உடல் இருண்ட பாரம். மனிதனால் சுமக்க முடியாத பாரம். உடல் ஜடமான சொரணையற்றதாகிவிட்டது. உடல் பிடிவாதம் செய்யும். தவசியின் வாழ்வு துறவாகியது. அவன் தேடுவது மோட்சம். மோட்சம் இடையறாத நினைவாகியது. உடலை விட்டொழிக்க ஆர்வம் எழுந்தது. ஜட வாழ்வை மனிதன் அறிய முற்பட்டான். ஜடமான பிரபஞ்சத்தின் சத்தியத்தை ஏற்க மறுத்தான். மதம் ஜடத்தைச் சாபமாகக் கருதுகிறது. எல்லா மதங்களும் அப்படி நினைக்கின்றன. மதம் கூறுவது முக்கியம். ஆன்மீகம் முக்கியம். தற்காலிகமாக உடலை மனம் ஏற்றது. ஆன்மீகமெனில் உடலை வெறுப்பதாக முடிந்தது. பழம்பெரும் மதங்கள் பொறுமையானவை. அவை ஆழ்ந்துணர்ந்தவை. நாம் வாழ்வது கலியுகம். அது பாரமானது. பிற்கால கொள்கைகள் சூடு நிறைந்த அவசரமானவை. அது ஆத்மாவின் அவசரம். ஜுர வேகம் கொடுமையாயிற்று. பிற்கால மதங்கள் உடலையும் ஆத்மாவையும் பிரித்தன. அது மலை போன்ற பிளவு. பழைய மதங்கள் அத்தவற்றைச் செய்யவில்லை. பூமியை பூமாதேவி எனவும், மோட்சத்தைப் பிதா எனவும் கூறினர். இருவரையும் சமமான அன்புடன் கருதினர். அவை பழம்பெரும் புதிர்கள். இவை நமக்கு விளங்கா. நம் பார்வைக்குப் புலப்படாதவை அவை. நாத்திகவாதியும், துறவியும் கொண்ட கொள்கை அவை. வாழ்வு சிக்கலானது. அதை அவிழ்க்காமல் சிதைக்கப் பார்க்கிறார்கள். அவ்வழி மனிதன் பிரச்சினையை விலக்குகிறான். சொர்க்கத்தை நாடித் திளைக்கிறான். அல்லது வாழ்வை அழித்து ஆத்ம சாந்தியடைகிறான். ஆன்மீக வாய்ப்பை நாம் அறியும் பொழுது இப்போராட்டம் தெரிகிறது. ஆனால் இதுவே உண்மையான ஆரம்பமில்லை. வாழ்வு ஆரம்பத்திலிருந்து இதுவும் ஆரம்பிக்கிறது. வாழ்வு தன் செயலை நிலைநிறுத்தப் போராடுகிறது. வாழ்வுக்குத் தமஸை எதிர்த்த ஜீவனுள்ள உருவங்களுண்டு. ஜட இருளின் சக்திகளை எதிர்த்தும் வாழ்வு போராடுகிறது. அதுவே சிதைவதையும் எதிர்க்க வேண்டியுள்ளது. அவை ஜட

தத்துவத்திற்குரிய சிக்கல்கள். முடிச்சு பெறும் மதிப்பு. வாழ்வு இவையனைத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும். தொடர்ந்து இடைவிடாமல் வாழ்வு, ஜடத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. இப்போராட்டத்தில் வாழ்வுக்குரியது நிரந்தர தோல்வி. தோல்வி தோற்றம், உண்மையல்ல. ஜட தத்துவத்தை நோக்கிப் போராட்டம் சரிகிறது. அது மரணம். போராட்டம் ஆழ்ந்து வலுவடைகிறது. மனத்திற்கு அதனுடைய சண்டை உண்டு. மனம், வாழ்வு ஜடத்தின் தாழ்ந்த முரட்டுத்தனத்திற்கு உட்பட வேண்டியுள்ளது. வாழ்வும் ஜடமும் அளவோடுள்ளவை. அவ்வரம்புகளை எதிர்த்து மனம் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. மனம் அவற்றை எதிர்த்துப் புரட்சி செய்கிறது. புரட்சி ஜடத்தின் தமஸை எதிர்த்துப் போராடும். மேலும் வாழ்வின் தீவிரப் பாசத்தையும் எதிர்க்க வேண்டியுள்ளது. பாசம் உள்ள இடத்தில் துன்பமிருக்கும். போராட்டம் திரும்புகிறது. இப்போராட்டம் பகுதியான சிறு போராட்டம். மனம் வெற்றி பெற்று எதிர்ப்பை அடக்குகிறது. பாச எழுச்சியை வெட்டி வீழ்த்துகிறது. உடலின் வேகத்தையும் மனம் சிதைக்கிறது. உடல் சமாளிப்பதை மனம் அனுமதிப்பதில்லை. மனம் பெரு அளவில் செயல்பட வேண்டியிருப்பதால் இவை அவசியமாகின்றன. உயர்ந்த தர்மம் எழுந்து தன்னை வலியுறுத்துகிறது. இப்போராட்டங்கள் வாழ்வை பொறுமையை இழக்கச் செய்கின்றன. உடல் வெறுப்படைகிறது. இரண்டிலிருந்தும் விலக வேண்டியிருக்கிறது. மனம் தலைமை தாங்கும் தார்மீக வாழ்வுக்கு வழி ஏற்படுகிறது. மனத்தை விட உயர்ந்த வாழ்வுக்கு வழி ஏற்படுகிறது. பிணக்கு முற்றி உயர்ந்து செயல்படுகிறது. மனம், வாழ்வு, உடல் கண்டிக்கப்படுகின்றன. உடலும், ஆசையுமான வாழ்வின் திருமூர்த்திகள் அவை. மனமும் வேதனையின் மூலமாக விலக்கப்படுகிறது. ஆத்மா மீதும் அதன் கருவிகள் மீதும் போர் தொடுக்கப்படுகின்றது. உள்ளுறை ஆத்மாவின் வெற்றியை அனைத்தும் நாடுகின்றன. அதன் குறுகிய வாழ்வின் இருப்பிடம் விலக வேண்டிய நிர்ப்பந்தம் எழுகிறது. இதனால் மனம், வாழ்வு, உடல் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன. முடிவாக ஆத்மா



அனந்தத்துள் சென்றடைகிறது. உலகம் பிணக்கானதை பிணக்கை வளர்த்து முடிவு தேடுகிறார்கள். முடிந்தவரை முடிவை வளர்த்து உயர்த்துகிறார்கள். வெட்டி, விலக்கி, முடிவாகப் பிரிய வேண்டியது நிலைமை.

வெற்றி, தோல்விகள் உண்டு. அவை தோற்றம். இது முடிவான தீர்வில்லை. இது பிரச்சினையிலிருந்து தப்பும் வழி. வாழ்வு ஜடத்தால் உண்மையிலேயே தோற்கடிக்கப்படுவதில்லை. ஒரு சமரசம் நடக்கிறது. வாழ்வை நீட்டிக்க மரணத்தை அது பயன்படுத்துகிறது. மனம் வாழ்வையும், ஜடத்தையும் வெல்கிறது என்பது உண்மையல்ல. வளர்ச்சி வருகிறது. ஆனால் பூரணமானதல்ல. சில வாய்ப்புகள் மற்றவற்றைப் புறக்கணித்து வளர்கின்றன. அவற்றின் வளர்ச்சி மற்றதன் வளர்ச்சியைப் பொருத்தது. சில வாய்ப்புகளை விலக்கி, மற்றதைப் பயன்படுத்தாத நிலையது. வாழ்வையும், உடலையும் முழு அளவில் நன்கு பயன்படுத்துவதில் அவ்வாய்ப்புகள் மிளிரும். மனம், வாழ்வு, உடல் எனும் தாழ்ந்த திருமூர்த்திகள் அவை. ஜீவாத்மா அவற்றை வெல்லவில்லை. அதன் உரிமையை மறுத்தது. ஆத்மா பிரபஞ்சத்தில் பல உருவங்களாகிறது. அவ்வழி ஆத்மா சில கடமைகளை மேற்கொள்கிறது. ஆனால் பிரச்சினைகட்குத் திருப்தியான தீர்வுகள் இல்லை. தன் முயற்சிக்கு வெற்றிகரமான முடிவில்லை. நமக்கு ஒரு பார்வையுண்டு. சச்சிதானந்தமே ஆரம்பம், முடிவு, மையம் என்பதாகும். எனவே நம் போராட்டமும், பிணக்கும் சாஸ்வதமானதல்ல. அவை அவற்றின் அடிப்படையில்லை. எனவே நாம் ஒரு முடிவு தேட வேண்டும். வாழ்வு ஜடத்தை வெல்வதில் அது உள்ளது. உடலை சிறப்பாக வாழ்வு பயன்படுத்துவதில் அது உள்ளது. அது வாழ்வு, ஜடத்தை மனம் வெல்வதில் உண்டு. அது சக்தி மூலம் நடக்கும், உடலை சிறப்பாக வாழ்வு பயன்படுத்துவதில் அது அமையும். மனம், வாழ்வு, உடலை வெல்வதில் அமையும். வாழ்வின் சக்தியை சுதந்திரமாக, சிறப்பாகப் பயன்படுத்துவதில் அது அமையும். அது மனத்தின் ரூபம். தன்னை அறியும் ஆத்மா அதைப் பயன்படுத்துகிறது.

இந்த முடிவான வெற்றியால் நாம் இத்தீர்மானத்திற்கு வந்துள்ளோம். இது மட்டுமே மற்றதை சாதிக்க முடியும். இந்த வெற்றிகள் எப்படி சாத்தியம் எனப் பார்க்கலாம். அல்லது எப்படி முழுமையாக முடியும் எனக் காணலாம். ஜடம் என்பதின் சத்தியத்தை நாம் அறிய வேண்டும். இதுவரை ஆத்மா, மனம், வாழ்வின் சத்தியத்தைக் கண்டோம். அது போல் ஜடத்தின் அடிப்படையான உண்மையைக் காண வேண்டும்.

ஜடம் இல்லை. அதற்கு வாழ்வு இல்லை. இது ஒரு வகையில் உண்மை. இன்று நாம் ஜடத்தை அறிவது அதன் உண்மையில்லை. நாம் ஜடத்தைப்பற்றி நினைப்பதும், அனுபவிப்பதும் உண்மையில்லை. அது தோற்றம். சிருஷ்டியில் உள்ள அனைத்தையும் நம் புலன்கள் அறியும். அவ்வுறவில் நாம் வாழ்கிறோம். அவ்வுறவில் ஜடத்தின் உண்மையில்லை. விஞ்ஞானம் கண்டுபிடிக்கிறது. ஜடம் ஆராய்ச்சியால் ரூபத்தை இழந்து சக்தியாகிறது. இது அடிப்படையான பிரபஞ்ச சத்தியம். விஞ்ஞானம் இவ்வுண்மையை அறியும். தத்துவம் வேறொரு உண்மையை அறியும். ஜடம் தோற்றமாக இருக்கிறது. இது ஜீவியம் காணும் தோற்றம். ஒரு சத்தியமுண்டு. அது ஆத்மா. அது தன்னை அறியும் ஜீவன். இதுவும் அடிப்படையான சத்தியம். இது பெரிய உண்மை. இதனுள் முழுமை அதிகமாக உள்ளது. தத்துவம் இதைக் கண்டுகொண்டது. இருந்தாலும் மேலும் ஒரு கேள்வி உண்டு. ஏன் சக்தி ஜடமாக வேண்டும்? அது சக்தியின் ஓட்டமாகவே இருக்கலாமல்லவா? ஜடம் ஆத்மா. ஜடம் ஆத்மாவாகவே இருக்கலாம். அதன் சந்தோஷங்களை அனுபவிக்கலாம். ஜடமாகத் தோன்றும் அவசியமென்ன? இது மனம் செய்தது என்கிறார்கள். இல்லையேல் இது வேறெதுவாகவுமிருக்கலாம். எண்ணம் நேரடியாக சிருஷ்டிப்பதில்லை. எண்ணம் ஜடப்பொருள்களைக் காணவும் முடியாது. அதனால் புலன்கள் செய்த காரியம் இதுவெனக் கூறுகிறார்கள். புலனறிவு ரூபத்தை சிருஷ்டிக்கிறது. புலன்கட்கு ரூபம் தெரிகிறது. எண்ணம் எழும் மனம் புலனறிவு ஏற்படுத்திய ரூபங்களை எடுத்துச் செயல்படுகிறது. புலனறிவு இந்த ரூபங்களை எண்ணத்திற்கு



சமர்ப்பிக்கிறது. ஒரு மனிதனுடைய மனம் ரூபங்களை உற்பத்தி செய்ததில்லை என்பது தெளிவு. ஜடம் என்ற தோற்றம் தனிமனிதன் உற்பத்தி செய்ததில்லை. மனித மனம் பூமாதேவி உற்பத்தி செய்தது. மனத்தால் பூமி உற்பத்தி செய்தது நாம் என்று கூற முடியாது. உலகமே மனத்துள் உள்ளது எனக் கூறலாம். அது உண்மை இல்லை. இது குழப்பம் விளைவிக்கும். மனிதன் பிறக்குமுன் ஜட உலகமிருந்தது. மனிதன் அழிந்தாலும் உலகமிருக்கும். நம் மனம் அனந்தத்தில் அழியலாம். ஆனால் ஜடமிருக்கும் உலகை சிருஷ்டித்தது பிரபஞ்ச மனம் என நாம் முடிவு செய்ய வேண்டும். அது உண்மையானால் அம்மனம் நம்மை அறியாமல் ஆழத்தில் மறைந்திருக்க வேண்டும். அது உலகமாக இருக்கும், அல்லது நம் அறிவுக்கு மேற்பட்ட ஆத்மாவாக இருக்கலாம். பிரபஞ்ச புலன் என்பது ஆத்மா உற்பத்தி செய்ததாகும். அது ரூபத்துடன் உறவுள்ள ரூபத்தை ஏற்படுத்துகிறது. ஜட உலகம் என்ற சக்தியலைகளைக் கொண்டது அது. இதுவும் முடிவான பதில் கூறும் விளக்கமாகாது. ஜடம் ஜீவியத்தால் சிருஷ்டிக்கப்பட்டது என இது கூறுகிறது. ஜடம் பிரபஞ்ச செயலின் அடிப்படை. இந்த முடிவு எப்படி ஜீவியம் ஜடத்தை உற்பத்தி செய்தது எனக் கூறவில்லை.

நாம் ஆரம்பத்தில் உள்ள சட்டங்களைக் கருதுவோம். அவ்வழி அதிகமாகப் புரியும். பெரு வாழ்வு செயல்பட்டால் சித்-சக்தியாகும். சக்தியின் செயல்களை ஜீவியத்திற்கு சமர்ப்பிக்கிறது. அவை அதன் சொந்த ஜீவனின் ரூபங்கள். நிலையான ஒன்று தன்னையறியும் ஜீவன். சக்தி அதன் செயலாகும். அதன் விளைவுகள் தன்னை அறியும் ஜீவனின் ரூபங்கள். பொருள் ஜடம். அதனால் ஜடம் ஆன்ம ரூபம். ஆத்ம ரூபம் நம் புலன்கட்குரிய தோற்றத்தைப் பெறுகிறது. மனத்தின் பிரிக்கும் குணத்திலிருந்து இது எழுகிறது. அதிலிருந்து பிரபஞ்சம் முழுவதும் நம்மால் அறிய முடிந்தது. ஒருபடி தவறாது நாம் பிரபஞ்சத்தை அப்படி புரிந்து கொண்டோம். பிரபஞ்ச விவரங்களை முழுவதும் அறிய இது உதவுகிறது. சித்-சக்தியின் செயல் என நாம்

இப்பொழுது அறிவோம். ஜட ரூபங்கள் அதன் விளைவு. வாழ்வு இந்த ரூபங்களுள் கலந்து மறைந்துள்ளது. முதலில் அவை ஜட இருள் சக்தியாக எழுகின்றன. இது பரிணாம வளர்ச்சி பெற்று மனம் வெளிப்படுகிறது. சக்தியின் உண்மையான ஜீவனாக அதன் ஜீவியமாக மனம் வெளிப்படுகிறது. வாழ்வு அதனுள் எப்பொழுதும் இல்லாமலில்லை. வெளிப்படாதபோதும் அது இல்லாமலில்லை. மூலமான தன்னையறியும் ஞானம் சத்திய ஜீவியம். மனம் சிறிய பவர்.

வாழ்வு, மனத்தின் கருவியின் சக்தியாகும். அது சத்திய ஜீவியம் வழி வருகிறது. ஜீவியம் சித். அது மனமாக செயல்படுகிறது. தன் உயர்ந்த சத்தியமான சத்திய ஜீவியத்தினின்று அது பிரிகிறது. வாழ்வுக்கு அது பிரிவினையாகத் தோன்றுகிறது. மேலும் தன்னுடைய வாழ்வு-சக்தியுள் அது கலந்து மறைகிறது. இது ஆழ்மன வாழ்வாகிறது. ஜட இருளின் சக்தியாக அது புறத்தில் தோன்றுகிறது. ஜட செயலில் அப்படி செயல்படுகிறது. அவ்வழி ஜட இருள், தமஸ் சிதையும் அணுக்களுக்கு ஒரு மூலம் ஏற்படுகிறது. இவை தளராது பிரிக்கும் மனத்தின் திறனில் உண்டு. இது தானே தன்னுள் மறைவது. இப்படி பிரபஞ்சம் உற்பத்தியாயிற்று. மனம் சத்திய ஜீவனின் முடிவான செயல். சிருஷ்டியில் அது நடக்கிறது. எனவே வாழ்வு சித்-சக்தியின் செயல். வாழ்வு அஞ்ஞானத்தின் நிபந்தனையில் செயல்படுகிறது. மனம் மேலிருந்து கீழே வருவதால் இது ஏற்பட்டது. எனவே ஜடம் சத் புருஷனின் முடிவான செயல். ஜடம் தன்னுள் பிரிந்த தோற்றமுடையது. இதைச் செய்வது பிரபஞ்ச மனம். இப்பிரிவினையை தனி மனித மனம் திருப்பிச் செய்கிறது. அது அதனுள் வதிகிறது. ஆனால் அதைக் குறைக்கவில்லை. ஆத்ம ஐக்கியத்தை சிறிதும் குறைக்கவில்லை. இது சக்தியின் ஐக்கியம். அல்லது இதுவே ஜடத்தின் உண்மை ஐக்கியம்.

இப்பிரிவினை தோற்றம். இது நடைமுறைக்குரியது. ஆதி, பகுக்க முடியாத முழு வாழ்வு. ஏனென நாமறியோம். இது மனத்தால்



நடந்தது. மனம் 'பல' என்ற சட்டத்திற்குரியது. அதைக் கடைசி வரை கொண்டு போகும் அவசியம் மனத்திற்குண்டு. அதைப் பிரித்து துண்டு செய்தே சாதிக்க முடியும். வாழ்வில் மனம் கலந்து கொள்வது இதற்கு அவசியம். 'பல'வற்றிற்குரிய ரூபங்களை அது ஏற்படுத்த வேண்டும். ஜீவன் பிரபஞ்ச சட்டம். அது பொருளின் தோற்றத்தைப் பெற வேண்டும். அது ஜீவனற்ற ஜடப்பொருளாக இருக்க வேண்டும். அது தூய்மையான சூட்சுமப் பொருளல்ல. அதற்குப் பொருளின் தோற்றம் தேவை. பொருள் எனில் மனத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். தொடர்பு நிலையாக இருக்க வேண்டும். பல பொருள்கள் ஏற்படும் பொழுது அவற்றுள் ஒரு பொருளாக இருக்க வேண்டும். தூய ஜீவியத்திற்குத் தொடர்புள்ள பொருளாக அது இருக்க முடியாது. தன் சொந்த சாஸ்வத வாழ்வின் அம்சமாக இருக்க வேண்டும். தூய்மையான வாழ்வு சத்தியம். அல்லது மென்மையான ரூபத்தின் சூட்சுமப் புலனாக அது இருக்க முடியாது. இங்கு அப்புலன் இருண்டிருக்கும். அது புறத்தில் உணரும் புலனாகும். அது பொருள்களைத் தீண்டும். தன் பொருள்களின் சத்தியத்திற்கு அதற்கு உத்தரவாதம் தேவை. சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தை மனம், வாழ்வில் புக அனுமதிக்கிறது. அதைத் தொடர்ந்து தூய பொருளும் உள்ளே வருகிறது. அது ஜடப் பொருளாகவும் நுழைகிறது. உறுதி ஜீவனைப் பலவாக செய்யும். தனித்த மையங்களினின்று பிரிந்த உணர்வை அது ஏற்படுத்த வேண்டும். இது உறுதி செயல்படுவதின் அவசியமான விளைவு. இது தாழ்ந்த உலக அனுபவத்தில் முதல் முறை. ஆன்மீக அடிப்படைக்கு நாம் திரும்பப் போவோம். இங்கு பொருள் மிகவும் தூய்மையானது. அது பிரிந்தால், பிரிந்து தன் ரூபத்தை இழந்தால், தன்னை அறியும் ஜீவனாகும். இதற்கு சுய வாழ்வுண்டு. அதற்குப் பிறப்புரிமையாக ஐக்கியம் மூலம் தன்னையறியும். ஆனால் தன் ஜீவியத்தைப் பொருளாக அது திருப்பவில்லை. சத்திய ஜீவியத்திற்கு இந்த ஞானம் உண்டு. அது ஐக்கியத்தால் அதைச் செய்யும். தன் பொருளை சுயமாக அறியும் ஐக்கியம் உண்டு. அதன் சுய சிருஷ்டியின் ஜோதியது. அந்த சிருஷ்டி

ஜீவனை அதற்கே அளிக்கும். இதை அகம்-புறமாகச் செய்யும். இது ஒன்று, பல தன் சொந்த செயல்படும் ஜீவியத்துடையது. ஜீவனைப் புறமாக சுப்ரீம் ஞானத்தில் பெறுகிறது. தன் முழு பார்வையால் அதைப் புறமாகவும், அகமாகவும் காணும். தன்னுள்ளே அது புறமாகத் தெரியும் பொருள். அகத்தில் அதைத் தானாகவே காணலாம். ஒரே சமயத்தில் அதைப் புறமாக வெளியில் காணலாம். அதன் ஜீவிய வட்டத்திற்கும், அது புறமாகத் தோன்றும் பொருள். அது வேறல்ல. அதன் ஜீவனின் பகுதியது. அதனின்று விலக்கப்பட்டப் பகுதி. அதாவது அதன் பார்வையிலிருந்து விலக்கப்பட்டது.

ஞானி, ஞானம், பொருளாக அது அமைகிறது. அது சாட்சிபுருஷன். புறத்தில் செயல்படும் இச்சலனத்தால் மனம் உருவாகிறது. இதை முன்பே கண்டோம். இதன்படி மனிதன் காண்கிறான். தன் பிரபஞ்ச ஜீவனின் ஒரு பகுதியை அவன் அடுத்தவராக அறிகிறான். இதுவே பிரிக்கும் மனம். அதேசமயம் வேறொரு செயலும் உண்டு. அதுவும் ஒரே சமயத்தில் நடப்பது, அல்லது அதே செயலின் பின்புறம். அது ஜீவனை இணைக்கும் செயல். அது பிரிவினைக்கு மாற்று செய்யும். சொந்த பார்வைக்கு உண்மையாவதை அது தடுக்கும். ஒரு நிமிஷமும் அனுமதிக்காது. அது அவனுக்கு மட்டும் உண்மையாக அனுமதிப்பதில்லை. அது தெரிந்து இணையும் செயல். இது பிரிக்கும் மனத்துள் வருகிறது. இருண்டு அஞ்ஞானமாய், புறத்தில் பிரதிபலிக்கிறது. அது ஜீவியத் தொடர்பாகக் காணப்படும். பிரிந்த ஜீவன், விலகியப் பொருளாக அவை தெரியும். பிரிந்த ஜீவனின் தொடர்பு புலன். அல்லது அடிப்படையில் இது புலனறிவாகத் தெரியும். இதுவே புலன் ஏற்படும் தத்துவம். எண்ணமுடைய மனம் இந்தப் புலனில் அடிப்படையில் செயல்படுகிறது. பிரியக்கூடிய இந்த ஐக்கியம் புலனறிவு. எண்ணத்தின் மனம் அடுத்த உயர்ந்த ஐக்கியத்தை நாடுகிறது. அங்குப் பிரிவினை ஐக்கியத்திற்குட்பட்டது. பொருள் ஜடப்பொருள். அந்த ரூபத்தில் மனம் புலனுடைய தொடர்பால் செயல்படும். அவ்வழி தன்னையறியும்



ஜீவனைத் தொடர்பு கொள்கிறது. மனமே இந்த ஞானத்தின் செயல்.

மனத்திற்குரிய சுபாவமுண்டு. தன்னையறியும் ஜீவனின் பொருளை மனம் அறிந்து புலனால் உணர்கிறது. அதனால் முழுமையையோ ஐக்கியத்தையோ அப்படி அறிய முடியாது. பிரிவினை சட்டப்படி புலனால் செயல்படுகிறது. மனம் அணுவின் சிறு பகுதிகளாலும் அதைக் காண்கிறது. முழுமையை எய்த பிரிந்த புள்ளிகளை ஒன்று சேர்க்கிறது. இந்தப் பார்வையின் கோணங்களால் பிரபஞ்ச மனம் உறைகிறது. அவை சேர்ந்தவை. மனம் முழு எண்ணத்தின் கருவி. அதன் உடன் பிறந்த சக்தியால் மனம் சிருஷ்டிக்கிறது. மனம் தான் காண்பவற்றை எல்லாம் வாழ்வின் சக்தியாக மாற்றும். அதுவே அதன் சுபாவம். அனைத்து வாழ்வு தன் சுய அம்சங்களை அப்படி சக்தியாக மாற்றுகிறது. சிருஷ்டிக்கும் சக்தியுள்ள ஜீவிய சக்தியாக பல வகையிலும் அதை மாற்றுகிறது. பிரபஞ்ச மனம் இப்பல்வேறு பார்வைகளை பிரபஞ்ச வாழ்வின் பிரபஞ்ச பார்வையாக மாற்றுகிறது. ஜடத்தில் அவை அணுவாக உருவாகின்றன. அவற்றுள் உள்ள வாழ்வு அவற்றிற்கு ஜீவனளிக்கிறது. மனமும் உறுதியும் அவற்றை ஆள்கின்றன. உருவத்தை அவை உந்துகின்றன. அப்படி உருவான அணு வாழ்வு அவற்றின் ஜீவனுக்குரிய சட்டம். அவை சேர்ந்து தொகுப்பாகின்றன. ஒவ்வொரு தொகுப்பும் தன் வாழ்வு தனி என்ற கற்பனையில் உள்ளது. மறைந்துள்ள வாழ்வு ரூபம் அவற்றிற்குரியது. மறைந்துள்ள மனமும் உறுதியும் உள்ளிருந்து உத்வேகமளிக்கின்றன. அதுபோன்ற தனித்த பொருள் (அ) வாழ்வுக்கு ஜீவனற்ற அகந்தையின் சக்தி ஆதரவு தருகிறது. அதன் உறுதி ஊமையானது. அது சிறைப்பட்டுள்ளது. இருந்தாலும் பவர் அதிகம். தன்னையறியும் மனத்தின் அகந்தை அதை விடுவிக்கிறது. அது தன்னையறியும். பிரிந்து செயல்படுகிறது. மனம் அதனுள் பொதிந்துள்ளதா, வெளிப்பட்டுள்ளதா, மறைந்துள்ளதா, மறைவிலிருந்து எழுகிறதா என்பதைப் பொருத்தது.

அணுவாக அமைப்பு இருப்பதே இதன் காரணம், காரணம் சாஸ்வதமானதல்ல. ஆதியில் எழுந்ததில்லை. ஜடத்தின் மூலமான சாஸ்வதமான சட்டம் இதற்குக் காரணமில்லை. பிரபஞ்ச மனத்தின் இயல்பான செயலே இதற்குக் காரணம். ஜடம் சிருஷ்டிக்கப்பட்டது. அதை சிருஷ்டிக்க அணுவை அணுவாகச் சிதைப்பது அவசியம். அது அடிப்படையாகவும், ஆரம்பமாகவும் வழங்கும். அணுவை அணுவின் சிதைவாகப் பிரித்தால் அது அனந்தத்தை அளவு கடந்து பிளந்ததாகும். ஆகாயம் இருக்கலாம். இருப்பது உண்மையாகவுமிருக்கலாம். அது தொடு உணர்வால் அறிய முடியாதது. அது ஜடத்திற்கு ஆன்மீக ஆதரவாகப் பெரும்பாலும் அமையும் என்றாலும் அது தோற்றம். நம் இன்றைய வளர்ச்சிக்கு அது ஜடமாகப் புலப்படவில்லை. அணு என நாம் அறிவது ஒரு தொகுப்பு. தொகுப்பாகத் தோன்றுவது, பார்வையைக் கடந்த நிலையில் மூலமும், சாரமும் உண்டு. தோற்றமான அணுவை சாரமான அணுவாக்குவோம். மேலும் துண்டு செய்தே அதைச் செய்ய முடியும். உடைப்போம். அணுவின் அணுவான தூசியாகட்டும். இப்பொழுது அணுவின் அமைப்பு இருக்கும். இது மனம், வாழ்வின் சுபாவத்திற்குரியது. அவை அணுவை உற்பத்தி செய்தன. அதற்கு நிலையில்லை. ஒருவேளை பிரிந்து சேர்ந்தபடியிருக்கலாம். அப்படியானால் அதுவும் தோற்றத்திற்குரியதே. சாஸ்வதமான சக்தியோட்ட அலைகளில் அதை நாம் காண்கிறோம். அது அணுவற்ற விரிவல்ல. அதற்கு உள்ளுறை விஷயமில்லை. அணுவற்று விரிந்த நிலை பொருளுக்கு எழுவது தூய பெருவாழ்வின் சத்தியம். அது விரிவு. தொகுப்பல்ல. பிரித்துப் பரப்புவதன்றி உடனுறையும் அமைப்பு அது. அது தூய்மையான பொருளின் சத்தியமுமாகும். அது சத்திய ஜீவிய ஞானம். அதன் வாழ்வின் தீவிரம் செயல்படும் சட்டம். பிரிக்கும் மனத்தின் சிருஷ்டித்திறன் வெளிப்படும் கருத்தல்ல. இது ஜடத்திற்கு அடிப்படையான சட்டத்தின் தோற்றமுமில்லை. இவை செயல்படும் பொழுது மனம் பின்னணியில் இவற்றை அறியும். ஜடத்தின் அடிப்படை சத்தியமது. நிலையான சத்தியம் தன்னையறிந்து



நீளும் நிகழ்ச்சியது. ஆனால் அவற்றின் ஒருமையுணர்வால் அவை செயல்படவில்லை. சுய உருவகத்தை சுயமாக உணர்ந்தறிவதுமில்லை.

ஜடத்தின் உண்மையை நாம் இப்பொழுது கண்டுகொண்டோம். ஜீவன் சிந்திப்பதால் தன்னை பிரபஞ்சமாக விரிவுபடுத்துகிறது. அது பிரபஞ்சத்தில் பொருளாகக் காணப்படுகிறது. அது ஜீவியத்தின் புறமாகும். பிரபஞ்ச மனமும் வாழ்வும் அதைப் பிரதிபலிக்கின்றன. அவற்றின் செயல் சிருஷ்டிக்கும் திறனுடையது. அது அணுவாகப் பிரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டது. இதன் விளைவாக நாம் ஜடம் எனக் கருதுவது எழுகிறது. இந்த ஜடம் மனம், வாழ்வு போன்றது. இது ஜீவன். இது பிரம்மம், சுயமாக சிருஷ்டிக்கும் திறனுடையது. தன்னையறியும் ஜீவனின் சக்தியின் ரூபம் இது. இந்த ரூபம் மனம் கொடுத்தது. இது வாழ்வால் பலித்தது. அதன் சத்தியத்தை அதனுள் பெற்றிருக்கிறது. அந்த சத்தியம் ஜீவியம். அது தன்னிடமிருந்தே மறைந்துள்ளது. தன் சுய உருவகத்துள் அது கலந்து மறைந்துள்ளது. எனவே, அதற்குத் தன்னையறியும் திறனில்லை. ஜடம் சொரணையற்ற மிருகம். நமக்கு அப்படித் தோன்றும். அதன் ஜீவியம் அதனுள் மறைந்துள்ளது. அதற்கு இரகஸ்ய அனுபவம் உண்டு. ஜடம் ஆனந்த ஜீவன். இரகஸ்ய ஜீவியத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கிறது. தன்னை உணர்வின் பொருளாகக் கொடுக்கிறது. மறைந்துள்ள கடவுளை ஆசைகாட்டி இப்படிச் செய்கிறது. அதன் இரகஸ்யத்தினின்று ஆசைகாட்டி வெளியில் கொண்டு வருகிறது. ஜடம் பொருளாக வெளிப்படும் ஜீவன். ஜடம் ஜீவனின் சக்திக்கு அளிக்கப்பட்ட ரூபம். உருவம் பெற்ற சுய பிரதிபலிப்பு இது. இரகஸ்யமான சுய ஜீவியத்தின் பிரதிநிதி ஜடம். ஆனந்தம் தன் ஜீவியத்திற்கே புறமாகத் தோன்றும் நிலை. ஜடம் என்பது சச்சிதானந்தம் தவிர வேறென்ன? ஜடம் சச்சிதானந்தம். தன் சொந்த மனத்தின் அனுபவம் காணும் நிலை, புற ஞானத்தின் தோற்றமான உருவம். அதுபோன்ற செயலும், ஆனந்தமுமான வாழ்வுக்கும் அது பொருந்தும்.

❋❋❋

## P.150 Acute to capture truth for outward use

### சத்தியத்தைப்பற்றி புறத்தில் பயன்படுத்தி

- ☆ அதன் ஞானம் உடலின் கருவியாகும்
- ☆ தான் சிறைப்பட்ட வீட்டின் சிறு கடமைகளில் தன்னை இழந்து
- ☆ மாறாத மையங்களைச் சுற்றி சுற்றி வலம் வந்து
- ☆ ஆசையும், ஆர்வத்தினாலுமான அதே வட்டத்தை வலம் வந்து
- ☆ அச்சிறையின் தலைவனென தன்னை நம்பியது
- ☆ விவேகத்திற்கன்றி வேலைக்காக வந்தாலும்
- ☆ எண்ணமே அதன் சிகரம், அதன் வாய்க்கால் விளிம்பு
- ☆ புற உலகின் பிம்பத்தை அது கண்டது
- ☆ மேற்புறத்தைக் கண்டது வேறெதையும் காணவில்லை
- ☆ குழம்பிய சிக்கலான சொந்த ஆராய்ச்சியை மெதுவாக நடத்தியது
- ☆ மனத்தின் தெளிவு வெட்டி எடுக்கப்பட்டது, துல்லியமாகாது அது
- ☆ கல்லாக இறுகிய அறியாமையைச் சூழ்ந்த மின்னல்
- ☆ குறுகிய சிந்தனையின் கட்டுப்பட்ட சிறு தலைமை
- ☆ ஆத்மாவில் இணைந்து, எளிமையான உற்சாகம் பெற்று
- ☆ பரிச்சியமான சிறு உலகைப் பாசமாகப் பற்றி
- ☆ ஏராளமான ஆர்வமான நாடகங்களிடையே



- ☆ மாறும் நடிகர்கள், இலட்சக்கணக்கான முகமூடிகள்
- ☆ வாழ்வு சப்பென இருக்கும் சாரமற்ற நாடகம்
- ☆ பரந்த ஆன்மீகக் கண்ணோட்டமின்றி
- ☆ அறிய முடியாத ஆனந்தம் வெள்ளமாக வேகமாகப் புகவில்லை
- ☆ பரந்த விடுதலை பொன்னான இடைவெளியை ஏற்படுத்தவில்லை
- ☆ மனித வாழ்வுபோல் தோன்றும் இச்சில்லறை நிலை
- ☆ மாறாத அச்சில் வார்க்கப்பட்ட பிரம்மத்துடன் பிணைந்து
- ☆ க்ஷணத்தின் சலனம் காலத்திற்கும் தொடரும்
- ☆ இருண்ட இடைவெளியைப் பாலமாக இணைக்கும் வாழ்வு
- ☆ மங்கிய ஒளி பொருந்திய மூடுபனி சூழ்ந்த கட்டடம்
- ☆ சூன்யத்தினின்றெழுந்து பார்வையில் தென்பட்டது
- ☆ ஆத்ம சூன்யத்துள் அதிவேகமாக நுழைந்தது
- ☆ பெரு இருளில் பிறந்த சிறு ஒளி
- ☆ எப்படி வந்தோம், எங்கு போகிறோம் என அறியாத வாழ்வு
- ☆ அதைச் சூழ்ந்துள்ள இருண்ட பார்வை

❋❋❋

**ஜீவிய மணி**

*புற வாழ்வு புலன் வாழ்வு.*

*அக வாழ்வு மன வாழ்வு.*

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## II/86) அசத்திலும் பரம்பொருளைக் காண்பது பூரண யோகம்.

☆ **பூரண யோகம் பூரணத்தை ஏற்கிறது.**

- சத், கர்மம், நியூட்டன் ஒரு வகை - பகுதி.
- அசத், சத், ஜீவன், ஐன்ஸ்டீன் அடுத்த வகை - முழுமை.
- நியூட்டனை விட உயர்ந்த மனம் இனி உற்பத்தியாகாது என்றார் பகவான்.
- ஐன்ஸ்டீன் நியூட்டனைக் கடந்தவர்.
- சென்ற நூற்றாண்டில் நியூட்டன் கூறியவை உண்மை.
- இருபதாம் நூற்றாண்டில் உலகம் மலர்ந்து நியூட்டனைக் கடந்தது.
- அதற்குரிய தத்துவத்தை ஐன்ஸ்டீன் கூறினார்.
- சந்திர மண்டலம் சென்றதும், இன்ட்டர்நெட், செல்போன் வந்ததும் நியூட்டன் தத்துவத்தை, உலகம் ஐன்ஸ்டீனால் கடந்து வந்ததால் நிகழ்ந்தவை.
- இந்திய மரபிற்கு, கர்மம் உண்மை. அது மனத்திற்குரிய உண்மை.
- மனம் சக்திக்கும், கர்மத்திற்கும் உரியது.
- சத்திய ஜீவியம் மனத்தைக் கடந்தது.
- அதனால் கர்மத்திற்குரிய சக்தியை மனிதன் கடந்து ஜீவனுக்கு வருகிறான்.
- கர்மம் அழிவது ஜீவன் எழுவதால்.
- சச்சிதானந்தமே முடிவு என்பது சிருஷ்டியை சத்தோடு முடிப்பது.



- சத்தைக் கடந்த அசத்துண்டு.
- சத்தும், அசத்தும் சேர்ந்த முழுமை பிரம்மம்.
- இதுவரை செய்த யோகங்கள் முடிவாக சச்சிதானந்தப் பிரம்மத்தை அடைந்தன.
- பூரண யோகம் அவர்கள் விலக்கிய அசத்தையும் சேர்த்துக் கொள்கிறது.
- அதைச் செய்ய மனத்தைக் கடந்து சத்திய ஜீவியம் வர வேண்டும்.
- மனம் செயல்படும்பொழுது கர்மம், இருள் உண்டு.
- மனத்தைக் கடந்து சத்திய ஜீவியம் செல்லும்பொழுது கர்மத்தைக் கடந்த ஜீவன் செயல்பட்டு இருள் அருளாகத் திருவுருமாறுகிறது.
- ஞானயோகி மனத்திலிருந்து அட்சரப் பிரம்மத்தையடைய பிரபஞ்சத்தைத் தவிர்க்கிறார்.
- பிரபஞ்சம் மனிதனுக்கும் இறைவனுக்கும் - பிரம்மத்திற்கும் - இடையில் உள்ளது.
- சமாதியால் மனிதனால் நேரே மனத்திலிருந்து பிரம்மத்தை அடைய முடியும்.
- அது கண் மூடிய நிலை.
- விழிப்பான நிலையில் மனிதன் முழுமையை நாடுகிறான்.
- முழுமை பிரபஞ்சத்தை ஏற்பதிலுள்ளது.
- கண் மூடிய நிலையில் எலிசபெத்தைக் கவர்வது விக்காம்.
- விழிப்பான நிலையில் எலிசபெத்தைக் கவர்வது டார்சி.
- பெம்பர்லி, சொத்து, வித்தியாசம்.
- யோகிக்கு பிரபஞ்சம் முழுமை தருவதுபோல் எலிசபெத்திற்குப் பெம்பர்லி முழுமை தருகிறது.
- எலிசபெத் உணர்ச்சி வசப்பட்டு, அறிவைப் பயன்படுத்தாமல், விக்காமை நாடினாள்.

- அறிவுடன் செயல்பட உணர்வைக் கடந்து வர வேண்டும். அது முழுமை.
- மனம் - அட்சரப் பிரம்மம் - சமாதி - பகுதி - கர்மம் - சக்தி - ஒரு நிலை.
- சத்திய ஜீவியம் - முழு பிரம்மம் - விழிப்பு - முழுமை - ஜீவன் - அடுத்த நிலை.
- அறிவில்லாத நிலையில் சேர மன்னன் காதல் வயப்பட்டு, முடியைத் துறந்து, முஸ்லீம் மாப்பிள்ளையானான். அவர்கட்கு மாப்பிளா முஸ்லீம் எனப் பெயர்.
- அதேபோல் எட்வர்ட் VII முடியைத் துறந்து அமெரிக்க (divorcee) விவாகரத்தான பெண்ணை மணந்தான்.
- இருவரும் வாழ்வில் தாழ்ந்தனர், உயரவில்லை.
- அறிவு உணர்வைக் கடந்தது, சத்திய ஜீவியம் அறிவைக் கடந்தது.

***

## II/87) பரம்பொருள் சத்தியமாகும் எனில் அசத்தாகவுமாகும்.

☆ **எதுவுமாகும் பரம்பொருள்.**

- பரம்பொருள் - பிரம்மம் - எதுவுமாகும்.
- பரம்பொருள் எதிரெதிரானவையாகவுமாகும், ஒரே சமயத்திலும் ஆகும்.
- பரம்பொருளுக்கு முடியாததில்லை.
- பரம்பொருள் சத்தாகி, சத்புருஷனாகி, ஆன்மாவாகி, சத்தியமாகிறது.
- அசத் என்பது பரம்பொருளில் சத் போக மீதி.
- சத்தாவதுபோல் பரம்பொருள் அசத்தாகவுமாகும்.
- சர்க்கார் நம்மைப் பாதுகாக்க ஏற்பட்டது.



- வெளிநாட்டுத் தாக்குதல்களினின்று சர்க்கார் நம்மைக் காக்கிறது.
- உள்நாட்டுக் கலவரத்தினின்றும் காப்பாற்றுகிறது.
- உள்நாட்டுக் கலவரத்தில் சர்க்கார் போலீஸ் மூலம் மக்களைத் தாக்குகிறது.

நம்மைக் காக்கும் சர்க்கார், நம்மைத் தாக்கவும் செய்கிறது.

- அணைக்கும் கரம் அடிக்கும்.
- அமிர்தமான பால் கெட்டுப் போனால் விஷமாகும்.
- ஏராளமான சௌகரியங்களைச் செய்யும் விஞ்ஞானம், ஏராளமான தொந்தரவுகளையும் செய்கிறது.
- கத்திக்கு வெட்டும் திறமை உண்டு. வெட்டலாம், வெட்டக் கூடாது என்ற குணமில்லை.
- திறமை கத்திக்குரியது, அதன் குணத்தை மனிதன் நிர்ணயிக்கிறான்.
- ரிஷிகள் பரம்பொருளை அட்சரப் பிரம்மமாகக் கண்டனர்.
- அட்சரப் பிரம்மம் அசைவற்றது, குணங்களற்றது, ரூபமற்றது.
- அதனால் ரிஷிகள் பிரம்மம் சிருஷ்டிக்க முடியாது என்றனர்.
- அசையாத பிரம்மம் எப்படி சிருஷ்டிக்கும் என்பது அவர்கள் நோக்கம்.
- பகவான் பிரம்மம் அசையாதது மட்டுமல்ல, வேண்டுமானால் அசையும் என்றார்.
- அசைவற்றதை உச்சகட்டமான நிலையெனக் கண்டனர் ரிஷிகள்.
- அசைவது திறனற்றது, அசையாத நிலை திறனுடையது என்று கருதினர்.
- பிரம்மம் அசையும் திறனற்றது எனக் கூறுவது சரியில்லை என்றார் பகவான்.

- அசையும் சுதந்திரம் அதற்கில்லை என நாம் கூறுவது அதன் முழு சுதந்திரத்தை மறுப்பதாகும் என்றார்.
- சுதந்திரம் என்ற கருத்தை ரிஷிகள்,
  - செயலிலிருந்து சுதந்திரம்.
  - அசைவிலிருந்து சுதந்திரம் என்று கொண்டனர்.
- பிரம்மத்தால் அசைய முடியாது எனில் அது பூரண சுதந்திரமாகாது என்றார் பகவான்.
- பிரம்மம் அசையும், அசையாமலுமிருக்கும், எதுவாக இருக்க வேண்டும் என்ற சுதந்திரம் அதற்குண்டு என்றார் பகவான்.
- மனம் பெற்ற சுதந்திரம் ரிஷிகள் கூறுவது.
- பகவான் கூறும் சுதந்திரம் சத்திய ஜீவிய சுதந்திரம்.
- மனத்திற்கு எல்லையுண்டு.
- சத்திய ஜீவியத்திற்கு எல்லையில்லை.
- ரிஷிகள் கண்ட பிரம்மம் பகுதியானது.
- பகவான் கண்ட பிரம்மம் முழுமையானது.
- போர்க்களம் சென்று ஆயுதமேந்தாமல் பாரதப் போரை வென்றது ரிஷிகள் கண்ட பகுதியான தெய்வீக மனத்திற்குரிய அட்சரப் பிரம்மம்.
- போர்க்களம் போகாமல், ஆயுதமேந்தாமல் உலகப் போரை வென்றது பகவான் கண்ட முழுமையான சத்திய ஜீவியத்திற்குரிய பிரம்மம்.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

***பொறுப்பால் திறமை வரும்.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 74. மனம் அடங்குவது

- மனமே மனிதன் என்பது பெருவாரியான நம்பிக்கை.
- வேதம் மனத்தைக் குதர்க்கம் என்றது.
- மனமே மனிதனானால், மனிதன் எப்படி மனத்தை அடக்குவான்.
- மனம் எப்படித் தானே அடங்கும்? ஏன் மனம் அடங்க வேண்டும்?
- செயலில் சாதிப்பவனுக்கு மனமே கருவி. மனத்தின் திறன் அவன் திறன்.
- யோகத்தை நாடுபவனுக்கு மனம் தடை.
- ஞான யோகம், ராஜ யோகம் மனத்தைக் கட்டுப்படுத்தும்.
- ஆத்மா பிரபஞ்சத்தில் செயல்படும் அரங்கம் மனம்.
- மனத்திற்கு இரு பகுதிகள் உள்ளன. அவை அகம், புறம்.
- புறம் ஐந்து புலன்களாலானது, அகம் எண்ணத்தாலானது.
- புறம், இடம்; அகம், காலம்.
- காலமும், இடமும் ஆத்மாவின் அக, புற வெளிப்பாடுகள்.
- காலத்தைக் கடந்தவன் ரிஷி, அவனுக்கு யோகம் உண்டு.
- மனம் ஒருவருக்குத் தானே அடங்குமானால், அவருக்குப் பூரண யோகம் தன் வாயிலைத் திறப்பதாகப் பொருள்.
- மனம் குதர்க்கமானது என்பதைக் கூறும் நிகழ்ச்சி, 'மருந்து சாப்பிடும் பொழுது குரங்கை நினைக்கக் கூடாது' என்றால், மருந்தைத் தொட்டால் குரங்கை மனம் நினைவுபடுத்தும்.

***வேண்டாம் என்பதை வேண்டும் என செய்வது குதர்க்கம்.***

- வேத காலத்தில் மனம் பிறந்து ஆட்சி செய்யவில்லை. அது உபநிஷத காலத்திற்குரியது.
- தர்க்க சாஸ்திரம் எழுந்த காலம் அது.
- ரிஷிகள் தர்க்கம் செய்தாலும், தர்க்கத்தின் முடிவைவிட அகவுணர்வைப் போற்றி ஏற்றனர்.
- சதஸில் ஒருவரையொருவர், "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" எனக் கேட்பதில்லை. "உங்களுக்கு என்ன தெரியும்? உங்கள் திருஷ்டியென்ன?" என்றே கேட்பார்கள்.
- சுருதி கேட்டது, ஸ்மிருதி நினைவிலிருப்பது. கேட்பது அசரீரி, வாணி, அந்தராத்மாவின் குரல். ரிஷிகட்கு மனம் கூறுவது முக்கியமில்லை. ஆத்மா கூறுவது முக்கியம்.
- மேல்நாட்டார் மன வளர்ச்சி பெற்றவர்.
- அவர் வாழ்வு மனத்தின் அறிவால் வழிநடத்தப்படுவதால் சிறப்பானது.
- நமக்கு இருந்த மன வளர்ச்சி அறுபத்து நான்கு சாஸ்திரம் எழுதியது. இப்பொழுது இழந்துவிட்டோம்.
- *மனம் வளர்ந்தால், வசதி எழும், மகிழ்ச்சி வாராது.*
- நம் நாட்டில் உள்ள சந்தோஷம் வெளிநாட்டிலில்லை.
- இந்த சந்தோஷத்தை ஆன்மீக சாந்தியாகக் காண்பது வழக்கம்.
- மன வளர்ச்சி பெரியது. ஆனால் வாழ்வின் மையம் மனிதன்.
- மனித வாழ்வு வளம் பெற்று மகிழும்படி மனம் வளர வேண்டும்.
- மனித வாழ்வைக் கருதாது வளரும் மனம் பிரச்சினையை எழுப்பும்.
- மனம் பிரச்சினை எழுப்பினால், அதைத் தீர்க்கும் சக்தி உலக வாழ்வில் இல்லை.



- மனம் மனிதனில் உயர்ந்த அம்சம். அது அடங்குவதில்லை.
- அடங்கினால் அதைவிடப் பெரியதில்லை. அவருக்குப் பூரண யோகம் பலிக்கும்.

***

## 75. உயிருக்கு ஆபத்து வந்த பொழுது எழும் பிரார்த்தனை - நம்பிக்கை பிறக்கிறது.

- அதே நிமிஷம் உயிர் போகும் - அடுத்த நிமிஷமில்லை - நிகழ்ச்சிகள் உண்டு.

  எலக்ட்ரிசிட்டி ஷாக், எதிரியின் துப்பாக்கி, மலை உச்சியிலிருந்து புரளும் நேரம், சூன்யம் போன்றவை.
- அந்த நேரம் நாம் நினைத்து, மனத்திற்கு தோன்றி, சமர்ப்பணம் செய்ய முடியாது.
- சமர்ப்பணம் தானே எழுந்து, க்ஷண நேரம் முன் - நம்மைக் காப்பாற்றுவதுண்டு. அது எவருக்கு ஏற்படுகிறதோ அவருக்கு பூரண யோக வாயில் திறக்கிறது.
- 'க்ஷணச் சித்தம் - க்ஷணப் பித்தம்' என்ற வழக்குச் சொல் பல வகையாகப் பயன்படுகிறது.

  அவற்றிற்கு எல்லாம் பொதுவானது - க்ஷணச் சித்தம், க்ஷணத்தில் எழும் சிந்தனை.
- சமர்ப்பணம் -
  - சமர்ப்பணம் முக்கியம்.
  - சமர்ப்பணம் முதல் கட்டம்.
  - சமர்ப்பணம் என்பது மட்டுமே வேலை, வேறு வேலையில்லை.
  - சமர்ப்பணம் நாம் செய்வது உண்மை.

தானே சமர்ப்பணம் எழுவதும் பெரிய உண்மை.

வேலையும் சமர்ப்பணமும் இணைந்துள்ள நிலையுண்டு.

சமர்ப்பணத்தை நம்புவதும் நம்பிக்கை.

சமர்ப்பணமும் தேவைப்படாத ஜீவன் ஆன்மீக ஜீவனுக்குரியது.

கீதையின் சரணாகதி ஜீவாத்மா, பரமாத்மாவுக்கு சரணடைவது.

அது சர்வ தர்மங்களையும் கை விட்ட நிலை.

தர்மம் என்பது எல்லா இலட்சியங்களையும் நம் ஜீவனில் செயல்படுத்தும் நம் சொந்த சட்டமான முறை.

ஒவ்வொருவருக்கும் உரிய தர்மம் உண்டு.

தர்மம் என்ற சொல்லை எந்த மொழிகளும் பெயர்க்க முடியாது.

Duty கடமை என்பது குறையான மொழி பெயர்ப்பு.

கீதையின் சரணாகதி மனத்தின் நம்பிக்கை.

நம்பிக்கையைக் கடந்து மனம் உண்டு.

மனத்தைக் கடந்த உணர்வும், உடலுணர்வும் உண்டு.

ஜீவன் அவற்றைக் கடந்து, அவற்றை உட்கொண்டது.

பகவான் கூறும் சரணாகதி ஜீவனின் சரணாகதி, அனைத்தையும் உட்கொண்ட ஜீவனுமாகும்.

சமர்ப்பணம் முதற் கட்டமானாலும் ஆரம்பிக்க முடியாது.

சமர்ப்பணம் முழு ஜீவனுக்குரியது, அடிமனக் குகையிலுள்ள சைத்திய புருஷனுக்குரியது.

இதுவரை செய்த யோகங்கள் அனைத்தும் மேல்மனத்திற்குரியவை.

இதுவரை செய்த யோகங்கள் அகந்தையின் யோகம்.



ஒரு முறை சமர்ப்பணம் செய்தால் மோட்சம் கிட்டும்.

- உயிருக்கு ஆபத்து வந்தபொழுது எழும் சமர்ப்பணம் உயிரைக் காப்பாற்றும். உயிரைக் காப்பாற்றி ஜீவனுக்கு அளிக்கும், ஜீவனை சமர்ப்பணத்தால் ஆன்மாவுக்கும் அளிக்கும். அதற்கு,

***ஆத்ம சமர்ப்பணம்***
***யோக சமர்ப்பணம் எனப் பெயர்.***

- *Synthesis of Yoga* என்ற நூலில் இரண்டாம் அத்தியாயம் self-consecration ஆத்ம சமர்ப்பணம் பதினெட்டு பக்கமுடையது.

அதிலுள்ள கருத்தின் சாரத்தை வாழ்வில் அனுபவத்தில் கண்டு, அன்பர்களுக்கு பலிக்கும் வகையில் பிரார்த்தனை பலிக்க நான் “சமர்ப்பணம்” எனக் கூறுவது

***அன்னையிடம் பிரச்சினையைக் கூறுவது.***

யோக சமர்ப்பணமான, ஆத்ம சமர்ப்பணம் அன்பர் பயிலும் சமர்ப்பணத்தினின்று காத தூரமுள்ளது. இது எளியது. அது முழுமையானது.

*தொடரும்.....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***சிருஷ்டியிலும், பரிணாமத்திலும்***

***இறைவன் ஆனந்தம் பெறுகிறான்.***

## நம் நியாயம், அன்னைக்கு அநியாயம், கொடுமை

- ஆசிரமத்திற்கு அந்த நாளில் (1920 முதல் 1930 வரை) வட நாட்டிலிருந்து குடும்பங்கள் வரும். பல நண்பர்கள் சேர்ந்து வருவார்கள்.
- அன்னை அந்நாளில் ப்யூஸ் போன பல்ப் போடுவதிலிருந்து, வந்த பூக்களை கழுவி சுத்தம் செய்வது வரை எல்லா வேலைகளிலும் பங்குகொள்வார்.
- எல்லா ஆசிரம கட்டிடங்கட்கும் (டிபார்ட்மெண்ட்) வருவார்.
- சாதகர்கள் வீட்டிற்கு வருவார், டென்னிஸ் விளையாடுவார்.
- விளையாட்டு மைதானத்தில் தினமும் பயிற்சியைப் பார்வையிடுவார்.
- பால்கனி தரிசனம் தருவார்.
- அவர் கண்ணில் பட்ட பல விசிட்டர்களில் ஒருவர் முகம் தேஜஸ் நிரம்பியிருந்தால் அவரை அழைத்து விசாரிப்பார். தினமும் வந்து பார்க்கச் சொல்வார்.
- 1958 முதல் தம் அறையை விட்டு வெளியே வருவதில்லை.
- வரிசையில் 9 வயது குழந்தை 100 பேருக்குப் பின்னால் நின்று ‘MOTHER’ என்று சொல்லிக்கொண்டேயிருந்ததால் தானுள்ள இடத்திலிருந்து திரும்பி அக்குழந்தையைப் பார்ப்பார்.
- லேக் எஸ்டேட்டில் ஒரு வயதான கிழவி, “அம்மா, அம்மா” எனக் கதறினால் டென்னிஸ் விளையாடுவதை விட்டுவிட்டு எஸ்டேட்டிற்குப் போய் அந்த வயதான பெண்ணைக் கண்டு ஆசிர்வதிப்பார்.
- பால்கனியில் உள்ள பொழுது அவ்வழியே போகும் கழுதை



திரும்பிப் பார்த்தால், அதன் பக்தியை மெச்சி அதை வாங்கச் சொல்லி தென்னந்தோப்பில் வைப்பார்.

- தேங்காய்மட்டை, கம்பளம் பேசும் குரல் அவருக்குக் கேட்கும்.
- வலி படும் மரத்தின் குரல் கேட்கும்.
- இந்த விலங்குகள், செடிகொடிகளுக்குள்ள பக்தியும் ஆர்வமும் நமக்கிருப்பதில்லை.
- பக்தியுள்ளவரை அன்னை அழைத்துப் பேசினால், அவருடன் வந்த அனைவரும் தங்களைக் கூப்பிடவில்லை எனக் குறைபடுவதைப் பற்றி அன்னை அடிக்கடி கூறுவார்.
- குழந்தைக்கு ஜுரம் என டாக்டரிடம் போனால் குழந்தைக்கு ஊசி போடுகிறார். என்னைக் கவனிக்கவில்லையே, எனக்கு ஊசி போடவில்லையே என நாம் குறைபடுவதில்லை.
- அன்னையிடம், பலருக்கு குருவான சாஸ்திரி தன் சிஷ்யனை அழைத்து வந்தார். அன்னை சிஷ்யனை அளவு கடந்து கவனித்து, முக்கிய வேலைகளைக் கொடுத்தார். குருவுக்கு பெயிண்ட் ஆபீஸில் பெயிண்ட் நிறுத்துக் கொடுக்கும் வேலையைக் கொடுத்தார்.
- அன்னை கொடுப்பதை ஏற்பது முறை.

  கேட்டுப் பெறுவது அன்னையிடம் முறையில்லை.

  கேட்டால் பெறும் பொருள், பிறகு வாராமலே போய்விடும் என நாம் காண்பதில்லை.

  ஜலதோஷமானதால், தன் பிறந்தநாளுக்கு அன்னை தரிசனம் தர சம்மதித்ததால், அவர் ‘ஜலதோஷத்துடன் போகக்கூடாது’ என முடிவு செய்தார். இது தவறினால் அடுத்த பிறந்தநாளன்றுதான் தரிசனம் கிடைக்கும்.

  அன்னை அவரைப் பாராட்டினார்.

  ஜலதோஷம் போனபிறகே அன்னையே கூப்பிட்டு அனுப்பி தரிசனம் கொடுத்தார்.

❋❋❋

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 12. ஆதாரச் சுருதி

கேப்பர் மலையில் முந்திரித் தோப்புகள் ஏராளம். நான் அங்கே ஒரு தோப்பை விலைக்கு வாங்க முடிவு செய்தேன். அதைத் தொடர்ந்து முந்திரிப் பயிரைப் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதில் என் கவனம் தீவிரமாகத் திரும்பிற்று. என் நேரத்தில் பெரும்பகுதி அதிலேயே செலவாயிற்று. அதன் மூலம் எனக்கு அது பற்றிய புதிய புதிய செய்திகளும், புதிய புதிய எச்சரிக்கைகளும் கிடைத்துக்கொண்டே இருந்தன. எச்சரிக்கைகளில் ஒன்று: 'தோப்பை வாங்கினால் மட்டும் போதாது. அதை நிர்வகிக்க நம்பிக்கையும், நாணயமும் மிகுந்த நபர் தேவை. இல்லாவிடில் மகசூல் முழுமையாக நம் கைக்குக் கிடைக்காது'.

என்னுடைய முழு நேரத்தையும் தோப்பிலேயே செலவிட முடியாது. ஆகவே நம்பிக்கையும், நாணயமும் நிறைந்த அனுபவசாலி ஒருவர் தேவை. இதில் ஏனோதானோ என்று இருந்துவிட்டால், பிறகு பாலுக்குப் பூனையைக் காவல் வைத்த கதையாகிவிடும்.

நான் வாங்க நினைத்திருந்த தோப்பை ஒரு காடு என்றே கூற வேண்டும். அரசாங்க ஆவணங்களில் 'அந்தத் தோப்பு ஒரு காடு' என்றே குறிப்பிடப்பட்டு உள்ளது. இன்றுகூட அந்தத் தோப்பில் நரி முதலான சிறு சிறு காட்டுப் பிராணிகள் அதிகமாக நடமாடிக்கொண்டிருக்கின்றன.

'காடு' என்று அழைப்பதே அதற்கு முற்றும் பொருந்தும். புதர்கள், கற்றாழைகள் என்று அங்கே இடைவெளியின்றி மண்டிக்கிடக்கும்.



வறட்சியை வரமாக வாங்கி வந்த மண். குடிக்க நீர் வேண்டும் என்றால் கையோடு கொண்டு போனால்தான் உண்டு. மிருகங்களால் மட்டுமல்லாது, மனிதர்களாலேயே உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிகழ்ச்சிகள் அந்தப் பக்கம் அதிகமாகவே நடந்து இருக்கின்றன.

"முந்திரித் தோப்பை விலைக்கு வாங்குவது ஆபத்தையே விலைக்கு வாங்குவது போன்றது. வேண்டாம், அந்த முயற்சியைக் கைவிட்டுவிடுங்கள்" என்று என் நண்பர்கள் என்னை அதிகமாகப் பயமுறுத்தினார்கள்.

ஆபத்தை எண்ணிப் பயப்படுபவன் தெருவில் இறங்கி நடக்கக்கூட முடியாது. எங்கேதான் ஆபத்து இல்லை? ஆபத்தின் அருகேதான் சாதனைப் பூக்கள் பூக்கின்றன. 'நெருப்பு' என்பது ஆபத்து. அந்த ஆபத்தான நெருப்பைக் கொண்டே சமையல் செய்கிறோமே, அது சாதனை. எனக்கு அஞ்சிப் பழக்கம் இல்லை. ஆனால் ஒரு செயலை வடிவமைப்பதற்கு முன், நான் அதைப் பற்றி அதிகமாகச் சிந்திப்பது பழக்கம்.

நான் அந்த முந்திரித் தோப்பைத் தேர்ந்தெடுத்ததற்கு ஒரு காரணம் உண்டு. 'நவீன முறையில் செயல்படும் விவசாயப் பண்ணை ஒன்றை முன்மாதிரியாக உருவாக்க வேண்டும்' என்று நான் நினைத்தேன். அதற்கு மிக அதிகப் பரப்பளவுள்ள நிலம் தேவைப்பட்டது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் அந்த முந்திரித் தோப்பு பல நூறு ஏக்கர்கள் கொண்ட பரப்பு உடையதாக இருந்தது. ஆகவே எதிர்ப்புகளையும், எச்சரிக்கைகளையும் உதறிவிட்டு அந்த முந்திரித் தோப்பை விலைக்கு வாங்கினேன்.

தோப்பை வாங்கியாயிற்று. இனி அதைப் பாதுகாக்க வேண்டுமே! அதுவோ வேற்றூர். உள்ளூர்க்காரர்கள் வெளியூர்க்காரர்களைக் கண்டால் வெறுப்பார்கள். மேலும் சிறந்த பலன்களை அடையவிடாமல் பாதகங்கள் பலவற்றைச் செய்வார்கள்.

ஆகவே அவர்களில் ஒருவரையே தோட்டத்திற்கு நிர்வாகியாகப் போட்டால் உள்ளூர்க்காரர்களின் தொல்லை இல்லாமல் போகும். அது சரி, அந்த உள்ளூர்க்காரரால் நமக்குத் தொல்லை இல்லாமல் இருக்க வேண்டுமே! அவர் நம்பகமானவராகவும், நாணயமிக்கவராகவும் இருக்க வேண்டுமே!

அத்தகைய தகுதி படைத்த தரமானவர் யார்?

அந்தப் பகுதியில் தோட்டங்களுக்குப் பொறுப்பாக இருந்து கவனிப்பவர்களை 'ஆராய்ச்சி' என்பார்கள். நான் வாங்கிய தோட்டத்தில் 20 ஆண்டுகளாக ஆராய்ச்சிக்காரராக இருந்தவருக்கே அந்தப் பொறுப்பைக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். 'அவரை நாம் தேடிப் போவதைவிட அவரே நம்மை நாடி வந்தால் நலமாக இருக்கும்' என்று நினைத்தேன். என்ன நலம்? நாமே கொடுத்துப் பெறுபவருக்கு உழைப்பு இல்லை. உழைப்பு இல்லாமல் பெறுவது உரிய பாதுகாப்பைப் பெறுவதில்லை. கேட்டுப் பெறுபவர் அதைக் காப்பாற்றிக் கொள்வதில் கவனமாக இருப்பார்.

அந்த ஆராய்ச்சி என்னைத் தேடி வரமாட்டாரா?

வந்தேவிட்டார். பொறுப்பைக் கேட்டார்; கொடுத்தேன்.

என் திட்டத்தில் இருந்த நவீன விவசாயப் பண்ணையைப் பற்றி அவரிடம் கூறினேன். அவர் சிரித்தார். "அதெல்லாம் அங்கே சாத்தியப்படாதுங்க. முழிச்சுக்கிட்டிருக்கிறபோதே முழியைத் தோண்டிக்கிட்டுப் போயிடக்கூடிய திருட்டுப்பசங்க இருக்கிற இடமுங்க அது. நீங்க அந்தப் பண்ணைக்குத் தேவையான விவசாயக் கருவிகளை வாங்கிப் போட்டா, ராவோடு ராவா அதை எல்லாம் ராவிக்கிட்டுப் போயிடுவானுங்க" என்று அவர் பங்குக்கும் ஓர் எச்சரிக்கையைக் கொடுத்தார்.

எங்கே திரும்பினாலும் இருட்டு. எந்தப் பகுதியிலும் ஒரு



நம்பிக்கைகூட முளைக்கவில்லை. அதற்காக நான் சோர்ந்து போகவில்லை. காலம் காலமாகக் காடாகக் கிடந்த அந்தப் பெரிய நிலப்பரப்பில் இருந்த புதர்களைக் களைந்தேன். மேடும் பள்ளமுமாகக் கிடந்த பகுதிகளைத் திருத்திச் சமன் செய்தேன்; வரப்பு செய்தேன்; அணைகள் எடுத்தேன்; சத்துமிக்க உரங்களைப் பரப்பினேன். 'அசுரப் பிரயத்தனம்' என்பார்களே, அப்படிப்பட்ட காரியம் அது. ஆயிரக்கணக்கில் செலவு செய்த தொகையைவிடப் பன்மடங்கு லாபத்தை அந்தத் தோப்பு கொடுக்கும் என்று எதிர்பார்த்தேன். பொதுவாக முந்திரித் தோப்புக்காரர்கள் என்னைப் போலச் செலவு செய்வதில்லை. முந்திரிக் கொட்டையைப் பொறுக்க மட்டுந்தான் செலவு செய்வார்கள். எவ்விதப் பிரயாசையும் இல்லாமலே ஓர் ஏக்கரில் ரூ.50 வரை வருமானம் கிடைத்த காலம் அது. மணிலாப் பயிரை எடுத்துக்கொண்டால், அப்பொழுதெல்லாம் அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.250 செலவு செய்வார்கள். நானோ முந்திரிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.400 வரை செலவு செய்திருந்தேன்.

நான் செய்த செலவு வீண் போகவில்லை. நான் எதிர்பார்த்தபடியே படிப்படியாகப் பெருகிவந்தது. இப்படியாக இரண்டு ஆண்டுகள் சென்றன. அதே ஆசாமிதான் இன்று வரை ஆராய்ச்சிக்காரராக இருந்து வந்தார். செலவுக்கு வேண்டிய பணத்தை நான் அவரிடம் மொத்தமாகக் கொடுப்பேன். செய்ய வேண்டிய வேலைகளை அவரே செய்து, அதற்காகும் செலவுகளையும் அவரே கவனித்துக்கொள்வார். எல்லாமே திட்டமிட்டபடிச் சரியாக நடந்து வந்தன. நான் நாள்தோறும் காலை நேரங்களில் தோப்புக்குச் சென்று ஒரு பார்வை பார்த்துவிட்டு வருவேன்.

"நீங்கள் உங்கள் ஆராய்ச்சியை அவ்வளவு தூரம் நம்பிப் பணப் பொறுப்பை ஒப்படைப்பது சரியில்லை; கவனமாக இருங்கள்" என்று பலர் என்னை எச்சரித்தார்கள்.

நான் அவர்களிடமிருந்து இங்கேதான் வேறுபடுகிறேன்.

ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைப்பதற்கு முன்னால் அவருடைய குணநலன்களை அலசி ஆராய்ந்து பார்ப்பது மிக அவசியம். அவ்வாறு ஒருவரை சலித்து எடுத்து ஒரு பொறுப்பில் அமர்த்திய பிறகு, அவரை சந்தேகிப்பதும், நாம் ஒரு போலீஸ்காரராக அவரைக் கண்காணிப்பதும் நல்லதில்லை. அவை அவரைப் பாதிப்பதைவிட, நாம் அவரிடம் கொடுத்திருக்கும் வேலைகளைத்தான் அதிகம் பாதிக்கும். திருவள்ளுவர் இதைப்பற்றி 'வினை செயல் வகை' என்ற அதிகாரத்தில் தெளிவாகப் பேசி இருக்கிறார்.

என்னுடைய ஆராய்ச்சி அதுவரை நாணயமாகவே நடந்துகொண்டார். தோப்பின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டு, ஆர்வமாக உழைத்தார். இரவு பகலாகத் தோட்டத்திலேயே பொழுதைக் கழித்தார்.

பிறகு என்ன வேண்டும்?

அதைப் பற்றி ஆரம்பத்தில் குறை கூறிய நண்பர்கள், இப்பொழுது இவ்வாறு சொன்னார்கள்: ''உங்களுக்கு அதிர்ஷ்டவசமாக ஒரு நல்ல ஆராய்ச்சி கிடைத்திருக்கிறார். இல்லாவிட்டால் தோப்பை நிர்வகிப்பது உங்களுக்கு ஒரு பெருந்தொல்லையாகி இருக்கும்".

அவ்வப்பொழுது ஏற்படும் உணர்வுகளை இப்படித்தான் பலர் பேச்சில் கொட்டிவிடுகிறார்கள். ஒருவரைப் பற்றி அவர்களால் இரு வேறு கருத்துகளை எப்படிச் சொல்ல முடிகிறது? அவசரம், அதனால் எழுகின்ற மதிப்பீடு. உணர்வுகளை அடக்கினால் பேச்சு அடங்கும். பேச்சு அடங்கினால் சக்தி பிறக்கும். சூனியத்தில்தான் சக்தியின் வெளிப்பாடு வெளிச்சமாகப் பரவுகிறது.

மூன்றாவது வருடம். மூன்றாவது மகசூலுக்குத் தோட்டம் தயாராகிக் கொண்டிருந்தது. முந்திரி மரங்கள் பூக்கத் தொடங்கின. இலைகளே தெரியாமல் மரமெல்லாம் பூக்கள்! அந்த அளவுக்குப்



பூக்கள் பூக்கும் என்று நாங்கள் யாருமே எதிர்பார்க்கவில்லை. பக்கத்துத் தோட்டங்களில் உள்ள முந்திரி மரங்கள் இந்த அளவு பூக்கவில்லை.

"நீங்கள் இரண்டு வருடங்களில் எதிர்பார்த்த பெரும்பலன் உங்களுக்கு இந்த வருடமே கிடைத்துவிடும்" என்றார்கள் சிலர்.

"நீங்கள் தோப்பு வாங்கியதிலிருந்து இதுவரை செலவிட்ட பெருந்தொகை உங்களுக்கு இந்த ஒரு மகசூலிலேயே கிடைத்துவிடும்" என்றார்கள் பலர்.

மரங்களில் நிறைந்திருந்த பூக்களைப் பார்க்கும்பொழுது எனக்கும் அவர்களைப் போலவே நினைக்கத் தோன்றியது. திட்டமிட்ட காலத்திற்குள்ளேயே ஒரு நல்ல பலன் கிடைப்பதாக இருந்தால், என்னுடைய திட்டத்தில் இருந்த நவீன ஆராய்ச்சிப் பண்ணையின் வேலையை ஒரு வலுவான நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வர இருந்ததைச் சிறிது காலத்திற்கு ஒத்திப்போடுவது என்றும், முந்திரித் தோப்பின் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வது என்றும் முடிவு செய்தேன்.

அந்தக் கட்டத்தில் நான் என்னுடைய ஆராய்ச்சிக்காரரையே முழுதும் நம்பி இருந்தேன். மனித வளர்ச்சியின் பரிணாமத்தில் ஒரு கட்டத்தைத் தாண்டி இன்னொரு கட்டத்திற்குப் போகும்பொழுது நிச்சயம் ஒரு மாற்றம் ஏற்பட்டே தீரும். அதைப் போல என்னுடைய முந்திரித் தோட்டம் 'செலவு' என்ற கட்டத்தைத் தாண்டி 'வரவு' என்ற கட்டத்தை நோக்கி முன்னேறும்பொழுது ஒரு பிரச்சனை வழிமறிக்கலாம் என்று என் உள்ளுணர்வு எச்சரித்தது.

எனக்குப் பிரச்சினை என்று வந்தால், அது ஆராய்ச்சியின் மூலமாக மட்டுமே வர முடியும். அவர் அப்படிப்பட்டவர் அல்லரே! என்னுடைய தோட்டத்தைத் தம்முடைய தோட்டமாக எண்ணி, அதன் வளர்ச்சியில் தன் சக்தியை எல்லாம் செலவிடுபவர் ஆயிற்றே!

மழையைக் கொடையாகக் கொடுக்கும் வானம்தான் இடியையும் இரக்கமின்றித் தருகிறது. அதைப்போல இதுவரை மழையாகப் பெய்த ஆராய்ச்சியைப் பார்த்த நான், இனி இடியாகவும் சந்திக்க நேரலாமோ?

புதிதான ஒன்றைச் சந்திக்கப் புதிரோடு காத்திருந்தேன்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு என் காரோட்டி ஒரு செய்தியைக் கொண்டு வந்தார். அது: "நம் ஆராய்ச்சி முன்பு போல் இல்லை. அவருக்கு ஆசை வந்துவிட்டது. ஐயா எதற்காக ஆயிரம் வேலைகளுக்கு மத்தியில் இந்தத் தோப்புக்கும் தினசரி வந்து போய்க்கொண்டிருக்க வேண்டும்? தோப்பை என்னிடம் குத்தகைக்கு விட்டுவிட்டு நிம்மதியாக அவரை வீட்டிலேயே இருக்கச் சொல். அறுவடை முடிந்ததும் குத்தகைப் பணத்தை மொத்தமாகக் கொடுத்து விடுகிறேன் என்று உங்களிடம் சொல்லச் சொன்னார்".

என்னுடைய காரோட்டியும், ஆராய்ச்சிக்காரரும் நெருங்கிய நண்பர்கள். நிச்சயம் அவர் சொல்லி இருப்பார். நான் எதிர்பார்த்தபடியே ஆராய்ச்சிக்காரரிடம் இருந்து ஒரு பூதம் கிளம்பிவிட்டது. அதாவது ஆசைப்பூதம்! மழை பெய்த வானம் இப்பொழுது இடியாய் இடிக்கிறது!

என்னுடைய தோப்பைச் சுற்றிப் பத்து முத்திரித் தோப்புகள் இருந்தன. அவற்றை எல்லாம் குத்தகைக்குத்தான் விடுகிறார்கள். அதைத் தவிர தோப்புக்காரர்களுக்கு வேறு வழி இல்லை. ஒரு நிர்ப்பந்தத்தை உண்டாக்கி, மகசூலை முழுவதும் பெற முடியாத சூழ்நிலையில் அவர்கள் தள்ளப்படும்பொழுது, 'கிடைத்த வரையிலாவது கிடைக்கட்டும்' என்ற முடிவுக்கு வந்து, தோப்பைக் குத்தகைக்கு விட்டுவிடுவார்கள். அதற்குப் பிறகு குத்தகைப் பணத்தைச் சரியாகக் கொடுப்பதில்லை. பாக்கியை வசூலிப்பதற்கும் வேறு வழி இருப்பது இல்லை. அதற்காகத் தோப்புக்காரர்கள் புதுக்



குத்தகைக்காரர்களைத் தேடிப் போகவும் முடியாது. வழிமறித்துக்கொண்டு நந்தியாக நிற்கும் ஆராய்ச்சிக்காரர்களாகச் செயல்படும் குத்தகைக்காரர்களைத் தாண்டி அவர்களால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது.

நான்தான் இதுவரை அவர்களைப் போல இல்லாமல் தனித்து இருந்தேன். இப்பொழுது என்னையும் அவர்களுள் ஒருவனாக்க முயல்கிறாரா என்னுடைய ஆராய்ச்சிக்காரர்?

தோப்பைக் குத்தகைக்கு விட்டால், பிறகு தோப்பு நமக்கு இல்லை. நமக்கு அதில் உறவு இருக்கலாம். ஆனால் பாத்திய உரிமை வேறு யாருக்கோ போய்விடும். என்னுடைய தோப்பு மற்ற தோப்புகளைப் போன்று சிறியதன்று; மிகப்பெரியது. அந்த ஆண்டு மகசூல் ஐந்திலிருந்து பத்து மடங்கு வரை அதிகமாகக் கிடைக்கலாம். அதே சமயத்தில் பூக்களை மட்டுமே பார்த்துவிட்டு மகசூலின் அளவை நிர்ணயிப்பது இயலாத காரியம். அந்தக் காலக் கிராமங்களில் முந்திரியை முறையாகப் பயிர் செய்வதும் இல்லை; எப்படியோ முளைக்கும்; எப்படியோ பயிராகும். அதனால் 'ஏதாவது பணத்தைக் குத்தகையாகக் கொடுக்க ஒப்புக்கொண்டால் போதும்' என்ற எண்ணம் நிலவிய காலம் அது.

சரி, ஏதோ ஒரு தொகையை நிர்ணயம் செய்து என்னுடைய ஆராய்ச்சிக்காரரிடம் தோப்பைக் குத்தகைக்கு விட்டுவிட்டால், பிறகு அங்கே என் திட்டத்தில் இருந்த நவீன விவசாயப் பண்ணையை நான் தொடங்கவே முடியாதபடி போய்விடலாம். அதற்காக நான் ஆராய்ச்சிக்காரரை வேலையை விட்டு நிறுத்தவும் முடியாது. நெளிவுசுளிவுகள் நிறைந்த அவர்கள், மகசூலை எல்லாம் வேறு வழிகளில் கொண்டு செல்வார்கள். அதற்குத் தகுந்த ஆள் பலம் அவர்களுக்கு உண்டு.

என்னுடைய ஆராய்ச்சிக்காரரைப் பற்றி நான் எடுத்த முடிவு

தவறானதோ? என் நண்பர்கள் அவரைப் பற்றிக் கூறிய கருத்துத்தான் சரியானதோ? உளவியலும், உலகியலும் இப்படித்தான் முரண்பட்டு நிற்குமோ? 'விண் விண்' என்று தெறிக்கும் வினாக்குறிகள்.

ஆராய்ச்சிக்கு எப்படியோ ஆசை தலைதூக்கிவிட்டது. அதை நான் எப்படியாவது சமாளித்தாக வேண்டும். ஆனால் எப்படி? அறிவுரை கூறியா? அது எடுபடாது. அவரை விலக்கி வைத்தா? அது எனக்குப் பாதகம். பிறகு பிரச்சனை தீர வழிதான் என்ன?

இது போன்ற சந்தர்ப்பங்களில் என் பிரச்சனைகளை அன்னையிடம் ஒப்படைத்து வேண்டிக்கொள்ளும் பழக்கம் எனக்கு அப்போதில்லை. இந்தப் பரிவர்த்தனை இல்லாமல் நானே பிரச்சனைகளைச் சுமந்துகொண்டு, அன்னையை நெஞ்சில் இருத்தி நெடுநேரம் தியானத்தில் ஆழ்ந்துவிடுவேன். பிறகு நெஞ்சை விட்டுப் பாரம் இறங்கிவிடும். பிரச்சனைகளும் தாமாகவே விலகிப் போகும். அது மட்டுமில்லை, ஆசிரமத்திற்கு வந்த ஆரம்பக் காலங்களில் எனக்குப் பிரச்சனைகளே இருந்ததும் இல்லை.

ஆராய்ச்சிக்காரர் ஒரு பிரச்சனையாக உருவெடுத்த அன்றிரவு, நான் அன்னையை என் மனத்தில் ஆவாகனம் செய்து தியானத்தில் ஆழ்ந்தேன். நீண்ட நேரத்திற்குப் பிறகு என் நிஷ்டை கலைந்தது. ஆனால் என்னைச் சுமையாக அழுத்திய ஆராய்ச்சி பிரச்சனை மட்டும் நீங்கவில்லை. இது எனக்கு வித்தியாசமான அனுபவம்.

மறுநாள் காலையில் ஸ்ரீ அரவிந்தருடைய சமாதிக்குச் சென்று தியானித்தேன். ஓரளவு நிம்மதி கிடைத்தது என்றாலும் பாரம் முழுவதும் நீங்கியபாடாக இல்லை. அன்று நான் ஆராய்ச்சியைச் சந்திப்பதற்கு முன்னால் ஏதேனும் ஒரு வழியைக் கண்டுபிடித்தாக வேண்டும். இனி இதை ஒத்திப்போட முடியாத நெருக்கடியான நிலை.

ஆரம்பக் காலங்களில் ஸ்ரீ அரவிந்தர் தங்கியிருந்து யோகம் செய்த அறைக்குச் சென்று தரிசிப்பதற்குப் பக்தர்களுக்கு ஓர் ஏற்பாடு



இருந்தது. தினசரி தரிசனம் உண்டு. அதற்கு சிலருக்கு மட்டுமே அனுமதி கிடைக்கும். அனுமதிச் சீட்டுகளை அன்னை அவர்களே நேரிடையாக வழங்குவார்கள். அன்று நானும் அன்னை அவர்களிடம் அனுமதிச் சீட்டைப் பெற்று, ஸ்ரீ அரவிந்தரின் அறைக்குச் சென்று சிறிது நேரம் தியானம் செய்தேன். பிறகு நான் அந்த அறையை விட்டு வெளியே வந்தபொழுது, அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு பெரியவர் என்னிடம் வந்தார்.

அவரின் பெயர் சம்பக்லால். இருபத்தைந்து ஆண்டுக் காலம் ஸ்ரீ அரவிந்தருடன் தங்கியிருந்து பல விதங்களிலும் அவருக்கு நேரடியான சேவைகளைச் செய்தவர். அவர் என்னை ஆழ்ந்து நோக்கி, "வீட்டில் ஏதேனும் முக்கிய நிகழ்ச்சி அலைமோதுகிறதா? அது சம்பந்தமாகத்தானே நீ இங்கு தியானம் செய்ய வந்தாய்?" என்று கேட்டார்.

'அது அவருக்கு எப்படித் தெரிந்தது?' என்ற வியப்பு என்னுள் எழுந்தபோதுதான், அந்தப் பிரச்சனையும் என் நினைவுக்கு வந்தது. அதுவரை நான் அந்தப் பிரச்சனையை மறந்துவிட்டிருந்தேன். ஸ்ரீ அரவிந்தரின் அறைக்குள் நுழையும் வரை அதைப் பற்றிய நினைவு இருந்தது. தியானத்தில் உட்கார்ந்ததும் அது மறந்தும், பறந்தும் போய்விட்டது. மகத்தைப் பெறப் போய் இகத்தை யார் பெறுவார்?

மறுநாள் மாலையில் ஒரு தீர்மானத்திற்கும் வர முடியாமல் தோப்புக்குச் சென்றேன். எப்பொழுதும் குழைந்த சிரிப்பும், கூழைக்கும்பிடுமாக என்னை வரவேற்கும் ஆராய்ச்சியின் முகம் அப்பொழுது இறுகிப்போயிருந்தது. என்ன கவலையோ அவருக்கு? இல்லை, ஏதேனும் திட்டமோ? அவற்றில் எது?

தெரிந்துகொள்ள விரும்பினேன். ஆனாலும் பக்கத்தில் நிறைய ஆட்கள் இருந்தமையால் எதுவும் பேசாமல் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். அவரும் என் பின்னால் வந்தார். ஆள்

நடமாட்டம் இல்லாத ஓர் ஒதுக்குப்புறத்தில் போய்க்கொண்டு இருந்தபோது, "என்ன சேதி?" என்று வழக்கம்போல் கேட்டேன். ஆனால் அவர்தான் வழக்கம் இல்லாமல், "நீங்கள்தான் சேதி சொல்லணும்" என்றார்.

'சேதி'யைச் சொல்லிவிட வேண்டியதுதான்! சொல்லத் தொடங்கினேன். தோப்பை வாங்கியதிலிருந்து இதுவரையில் நிகழ்ந்த காரியங்களையும், செய்த செலவுகளையும் விவரமாகத் தெரிவித்தேன். பிறகு "ஆராய்ச்சி, உனக்குச் சில எதிர்பார்ப்புகள் இருந்தால், அதில் ஒன்றும் தவறில்லை. அறுவடை முடிந்து வருகின்ற மகசூலை வைத்து நாம் இருவரும் சுமுகமாகப் பேசி உனக்கு என்ன கொடுக்கலாம் என்பதை முடிவு செய்வோம்....." என்று நான் சொல்லிக்கொண்டு இருக்கும்பொழுதே அவர் இடைமறித்தார்.

"நீங்கள் இந்த மண்ணிலே தொடை அளவு உரத்தையும், முழங்கால் அளவு பணத்தையும் போட்டு நிரப்பி இருக்கீங்க. அந்தப் பணத்தை எல்லாம் நான் என் கையாலே செலவிட்டிருக்கேன். தோப்பிலே எவ்வளவு கிடைச்சாலும் அது உங்களுக்குத்தான் சேரணும். நியாயமானதைத் தவிர, உங்களிடம் நான் வேறு எதையும் கேட்கமாட்டேன். அதனாலே உங்களைவிட அதிகமாகக் கொடுக்கிறவங்க யாரும் இல்லை" என்றார் அவர்.

எனக்கு ஒரே வியப்பு. அவர் நான் நினைத்ததையே பேசுகிறார்! அது மட்டுமன்று, தோப்பு குத்தகையைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. அவரைப் பற்றிய என் நண்பர்களின் கருத்து கடைசி முறையாகவும் பொய்த்துப் போனதோடு, அவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னால் நான் செய்த ஆய்வு இறுதியாகவும் வென்றுவிட்டது!

நான் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே தம்மை உணர்ந்து, என்னையும் உணர்ந்து, கண்கலங்கி நின்ற அவரைப் பார்த்தபொழுது எனக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது. "நீ ஒரேயடியாக விட்டுக்கொடுப்பதை



நான் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நீ மகசூல் செய்து காட்டும் ஒவ்வொரு மூட்டை முந்திரிப்பருப்புக்கும் இவ்வளவு கொடுத்துவிடுகிறேன்" என்று, ஒரு தொகையைச் சொன்னேன்.

அதை நின்று கேட்கக்கூட அவர் தயாராக இல்லை. "பணம் அப்புறங்க, முதலிலே வேலையைச் செய்யணும். எனக்குத் தலைக்கு மேல் வேலை கிடக்குதுங்க. நான் வரேங்க" என்று கூறிவிட்டு வேகமாக நடந்தார்.

ஒரு மாற்றம் ஏமாற்றமாக இல்லாமல் ஏற்றமாக அமைந்தது. அது அன்று அத்தனை வெற்றிகரமாக அமைந்திருக்காவிட்டால், பிறகு நான் அங்கு திட்டமிட்டபடி ஒரு நவீனமான விவசாயப் பண்ணையை உருவாக்கி இருக்க முடியாது.

'இன்னார்' என்று தெளிந்து, அன்னாரிடம் பணியை ஒப்படைப்பது சிறந்த வினை செயல் வகையாகும். ஐம்பது அடுக்கு மாளிகையேயானாலும் அதற்கு அஸ்திவாரம்தான் ஆதாரம். அதே போல நம் வினை செயல் திறனுக்கும், நாம் தேர்ந்து எடுக்கும் பணியாளர்களே ஆதாரம்.

அந்த ஆதாரச் சுருதி சரியாக அமைந்திராதுபோனால், கட்டாந் தரையாகக் கிடந்த என்னுடைய காட்டில், இன்று கழனிகள் நிறைந்த ஒரு மிகப்பெரிய விவசாயப் பண்ணையை நான் கண்ணால் பார்த்திருக்கவே முடியாது.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***மனம் ஆனந்தமயமானால் ஜடமிருப்பதில்லை.***

# மூடநம்பிக்கையும் அவற்றிலிருந்து விடுபடுதலும்

N. அசோகன்

மனிதன் தனக்குத் தேவையில்லாதது எவ்வளவையோ தன்னோடு சேர்த்துக் கொண்டுள்ளான். அப்படி சேர்த்துக் கொண்டதில் மூடநம்பிக்கையும் ஒன்று. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கல்வியறிவு மக்களிடையே பரவி வருவதால் மூடநம்பிக்கையின் ஆதிக்கம் பரவலாக குறைந்து வருகிறது. இருந்தாலும் மனிதன் முழுமையாக விடுபட்டுவிட்டான் என்று சொல்ல முடியாது. மூடநம்பிக்கை ஓங்கி இருந்த நாட்களில் மனிதர்களுடைய அறியாமை எந்த அளவிற்கு மோசமாக இருந்ததென்று இன்று நாம் கேள்விப்பட்டாலும் நமக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. உலகம் உருண்டை என்றே தெரியாமல் அதைத் தட்டை என்றே நம்பினார்கள். இப்படி நம்பியதால் கடலில் அதிக தூரம் பிரயாணம் செய்யவே பயந்தார்கள். அதாவது அதிக தூரம் சென்றால் விளிம்பு வந்துவிடும். அதன்பின் விளிம்பில் இருந்து வீழ்ந்தால் அதள பாதாளத்தில் விழுவோம் என்று பயந்தார்கள். இதனால் நெடுந்தூர கடற்பிரயாணமே தடைப்பட்டிருந்தது. கண்ணுக்குத் தெரியாத நுண்கிருமிகளால் வியாதிகள் பரவுவதையே அறியாத மக்கள் ஊரில் தொற்றுநோய் பரவினால் அதை ஏதோ தெய்வ குற்றம் நடந்துவிட்டது. அதனால் ஆண்டவன் நம்மை இப்படித் தண்டிக்கிறான் என்று பயந்தார்கள். இப்படியெல்லாம் நம்பிக் கொண்டிருந்தார்கள் என்று இன்று நமக்குத் தெரிந்தால்கூட நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் அதுதான் உண்மை.

ஒருவேளை 500 வருடம் கழித்து பின்னால் வருகிற மனிதர்கள்



நாம் இன்று நம்பிக் கொண்டிருக்கும் விஷயங்களை இதே அளவிற்கு மூடநம்பிக்கை என்று நினைத்துக்கூட வேடிக்கையாக எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. பெட்ரோலும், நிலக்கரியும் தீர்ந்துவிட்டால் என்ன செய்வது? கார்கள் எப்படி இயங்கும்? அனல் மின் உற்பத்திக்கு நிலக்கரியை விட்டால் வேறு என்ன வழி என்று நாம் இன்று விழித்துக் கொண்டிருக்கிறோம். இந்த பயம் நமக்கு நிஜமாகவே தெரிகிறது. இது மூடநம்பிக்கை என்றால் யாரேனும் ஒத்துக் கொள்வார்களா? ஆனால் 100 வருடத்தில் பேட்டரி டெக்னாலஜியில் நிறைய முன்னேற்றங்கள் வந்து, இன்று பெட்ரோல் கார் எவ்வளவு வேகமாக ஓடுகிறதோ அதே வேகத்தில் பேட்டரி காரும் ஓடலாம். அப்படி பேட்டரி காரில் செல்கின்ற மனிதன் பெட்ரோல் தீர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று விழித்துக் கொண்டிருக்கின்ற நம்மை பார்த்து முட்டாள்கள் என்று வேடிக்கையாகச் சிரிக்கலாம். இப்பொழுதுகூட விஞ்ஞானிகள் பூமி நாளுக்குநாள் வெப்பம் அதிகரித்து வருகிறது. இது தொடர்ந்தால், தட்பவெப்ப நிலை 50 டிகிரியைக் கடந்தால், துருவ பிரதேசத்திலுள்ள பனிப்பாறைகள் எல்லாம் உருகும். கடலோரப் பிரதேசங்கள் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கும், கோடிக்கணக்கான மக்கள் வீடு, வாசலை இழப்பார்கள் என்று அச்சுறுத்துகிறார்கள். இந்த பயம் இன்று நமக்கு நிஜமாகத் தெரிகிறது. உலக நாடுகள் இப்பொழுதே கவலைப்பட ஆரம்பித்துவிட்டன. ஆனால் 100 வருடங்கள் கழித்து இந்த ஆபத்து வராமலேயேகூட போகலாம். வருங்கால விஞ்ஞானிகள் மேகமூட்டம் எப்படி சூரிய ஒளியைத் தடுக்கிறதோ, அம்மாதிரி பத்து, பதினைந்து கி.மீ. உயரத்தில் உலகம் முழுவதும் ஒரு chemical aerosol spray வானத்தில் பரப்பிவிடலாம். அந்த aerosol spray மேகமூட்டம் போல் செயல்பட்டு சூரிய ஒளி உள்ளே நுழைவதை தடுக்கலாம். அப்பொழுது பூமி வெப்பமாவது என்ற பிரச்சினையே வராது. இம்மாதிரி இன்று நம் அறிவால் தீர்க்க முடியாத பிரச்சினைகளை வருங்கால மனிதன் தன்னுடைய உயர்ந்த அறிவால் தீர்த்துக் கொள்ளும் பொழுது இன்று

நமக்கு இருக்கின்ற அச்சங்களையும், பயங்களையும் நினைத்துச் சிரிக்க வாய்ப்பிருக்கிறது.

'மூடநம்பிக்கை என்றால் என்ன?' என்று நாம் இப்பொழுது பார்க்கலாம். இப்படிப் பார்ப்பதோடு மட்டும் இல்லாமல் மூடநம்பிக்கைக்கு யார், யார் பலியாவார்கள் என்பதையும் நாம் கருத வேண்டும். மூடநம்பிக்கையை நாம் முட்டாள்தனமான தவறான நம்பிக்கை என்று சொல்லலாம். அதாவது இருக்கின்ற உண்மையைத் தவறாகப் புரிந்து கொள்ளுதல் என்று வரும். உதாரணமாக உலகம் உருண்டை என்பதுதான் உண்மையானது. அது புரியாமல், பல நூற்றாண்டுகளாக அந்த உண்மை புரியாமல் உலகம் தட்டையானது என்று நம்பி வந்தார்கள். 16ஆம் நூற்றாண்டு கால அளவில்தான் பூமி தட்டை அல்ல, உருண்டையானது என்று உலகத்திற்குத் தெரிய வந்தது. ஒரு பக்கம் மூடநம்பிக்கை இப்படி எழும் என்றால், இன்னொரு பக்கம் இல்லாததை இருப்பதாக வைத்துக் கொள்வதும் உண்டு. உதாரணமாக பைபிளில் ஆண்டவன் உலகத்தை 6000 வருடத்திற்குமுன் படைத்தான் என்று எழுதப்பட்டுள்ளது. அதுவும் நேரடியாக மனிதன் ஆண்டவனால் படைக்கப்பட்டவன் என்று கூறுகிறது. ஆனால் இவையிரண்டும் உண்மையேயில்லை என்று சார்லஸ் டார்வின் அவர்கள் தன்னுடைய பரிணாம கொள்கை மூலம் நிரூபித்தார். இதன்படி பார்த்தால் உலகம் 2 கோடி வருடங்களாக இருந்திருக்கிறது. மனிதன் குரங்கிலிருந்து தோன்றியிருக்கிறான். உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் பரிணாம வளர்ச்சியினால்தான் தோன்றியிருக்கின்றன என்று தெரிகிறது. இந்த உண்மை மிகவும் அதிர்ச்சியாக இருந்ததால் பைபிளில் சொல்லப்பட்டதை அப்படியே நம்புகின்றவர்களால் இதை உண்மை என்று எடுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் அவர்கள் இன்றுவரை பைபிளில் சொன்னதைதான் நம்புவோம், இதை ஏற்கமாட்டோம் என்று பிடிவாதம் செய்கிறார்கள். இது இரண்டாம் வகை மூடநம்பிக்கை என்றால், மூன்றாவது வகையும் ஒன்று இருக்கிறது.



அதுதான் சம்பந்தமில்லாத இரண்டு விஷயங்களை சம்பந்தம் உண்டு என்று தொடர்புபடுத்திப் பேசுவது, அதனடிப்படையில் செயல்படுவது. உதாரணமாக தான் செய்கின்ற பிஸினஸில் நஷ்டப்படுகின்றவர்கள் அந்த நஷ்டத்திற்கு என்ன காரணம் என்று நியாயமாக அவர்கள் கடைப்பிடிக்கின்ற பிஸினஸ் அணுகுமுறை-களையே பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அப்படி பார்த்தால், ஒன்று பொருள் தரமற்றதாக இருக்கலாம், அல்லது விலை கஸ்டமர்கள் கொடுக்க விரும்பாத அளவிற்கு அதிகமாக இருக்கலாம். மார்க்கெட்டில் இருக்கின்ற டிமாண்ட் அளவிற்கு சப்ளை பண்ண முடியாமல் போகலாம் அல்லது பொருளுக்கு எதிர்பார்க்கும் டிமாண்ட் மார்க்கெட்டிலும் இல்லாமலும் போகலாம். இப்படி பிஸினஸ் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து, அதை சரி செய்து, நஷ்டத்தைத் தவிர்ப்பதுதான் நியாயமான அணுகுமுறை. ஆனால் இப்படி எதுவும் செய்யாமல் பிஸினஸிற்கு சம்பந்தமே இல்லாத வேறு காரணங்களைக் கண்டுபிடிப்பவர்கள் இருக்கிறார்கள். அதாவது பிஸினஸில் நஷ்டம் வருவதற்குக் காரணமே அந்த பிஸினஸ் நடத்தப்படும் இடம் அந்த பிஸினஸிற்கு ராசியில்லாத இடம் என்று ஒரு முடிவுக்கு வருவார்கள். இங்கேதான் வாஸ்து நிபுணர்கள் விதவிதமான கருத்துகளை தெரிவிப்பார்கள். கட்டிடத்தில் வாசல் சரியான திசையில் இல்லை, ஸ்டோர் ரூம் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை, ஆபீஸ் ரூம் வேறு இடத்தில் இருக்க வேண்டும், என்றெல்லாம் விளக்கம் கொடுப்பார்கள். இதையெல்லாம் நம்பிக் கொண்டு ஏராளமாக செலவு செய்து கட்டிடத்தை மாற்றி அமைப்பவர்கள் உண்டு. அப்படி என்னதான் செலவு செய்து கட்டிடத்தை மாற்றி அமைத்தாலும் அடிப்படை பிஸினஸ் தவற்றை சரி செய்யாமல் வெறும் கட்டிடத்தை மாற்றி அமைப்பதால் நஷ்டத்திலிருந்து மீள முடியாமல் அதிர்ச்சியில் ஆழ்பவரும் உண்டு. ஆக, இங்கே என்ன தவறு நடக்கிறது என்று பார்த்தால் பிஸினஸ் நஷ்டத்திற்கு சம்பந்தமே இல்லாத கட்டிட அமைப்பை

சம்பந்தப்படுத்துவதுதான் தவறு என்று தெரிகிறது. இம்மாதிரி சம்பந்தம் இல்லாத விஷயங்களை சம்பந்தப்படுத்தி நிறைய தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக ஒரு வேலைக்கு ஆள் தேர்வு செய்வதை எடுத்துக் கொள்வோம். ஒரு கம்பனியில் அக்கௌண்ட் செக்ஷனில் வேலைக்கு ஆள் தேவை என்றால், அப்படி வேலை தேடி வருபவர்களிடம் அந்த வேலைக்குண்டான கல்வித் தகுதி மற்றும் அனுபவம் இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர இவையிரண்டையும் விட்டுவிட்டு வேலைக்கு சம்பந்தமே இல்லாத பெயர் ராசி பார்ப்பது எந்த விதத்தில் சரி? இது அப்பட்டமான தவறு என்று நமக்குத் தெரிந்தாலும் ஒரு பெரிய வர்த்தக நிறுவனத்தில் இதைத்தான் செய்தார்கள்.

காலியாக இருக்கின்ற முக்கியமான பணியிடங்களுக்குப் பொருத்தமானவர்களை மானேஜர் தேர்வு செய்து முதலாளியின் பார்வைக்கு அனுப்பிய பொழுது, அனுப்பப்பட்ட பட்டியலில் முக்கால்வாசி பேர்களை நியூமராலஜியின்படி பெயர் சரியில்லை என்று முதலாளி தட்டிக்கழித்து அனுப்பினார். 20,000 ரூபாய் சம்பளத்திற்கு வேலைக்கு இண்டர்வியூவிற்கு வருகிறவர்கள் இப்படி பெயர் ராசி சரியில்லை, அதனால் முதலாளி நிராகரித்தார் என்று கேள்விப்பட்டால் அந்த வர்த்தக நிறுவனத்தைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள். ஆனால் இப்படித்தான் வியாபார நிறுவனங்களை நடத்துபவர்கள் பல பேர் சம்பந்தமில்லாத விஷயங்களை சம்பந்தம் உள்ளதாக நினைத்து தம் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளாமல் மேன்மேலும் நிலைமையை மோசமாக்கிக் கொள்கிறார்கள்.

இப்பொழுது மூடநம்பிக்கைக்கு யார், யார் பலியாகிறார்கள் என்பதைப் பார்ப்போம். மேலோட்டமாக பார்வைக்கு நிஜமாகத் தெரிவதை அப்படியே விசாரிக்காமல் நம்புகின்றவர்கள்தாம் இம்மாதிரி மூடநம்பிக்கைக்கு பலியாகின்றார்கள். இப்படிக் கண்ணுக்குத் தெரிவது பொய், தீர விசாரிப்பதே மெய் என்ற பழமொழியே இருக்கிறது.



P & P கதையில் விக்காமுடைய மேனர்ஸ் எல்லோரையும் மகிழ்விக்கின்றன. ஆனால் அதே சமயத்தில் டார்சியினுடைய மேனர்ஸ் எல்லோருக்கும் கோபத்தை உண்டாக்குகின்றன. இப்படி மேலோட்டமான நடத்தையை மட்டும் பார்த்துவிட்டு விக்காம் நல்லவன், டார்சி கெட்டவன் என்ற முடிவுக்கு எல்லோரும் வந்துவிடுகிறார்கள். இது எவ்வளவு பெரிய தவறு என்று ஆரம்பத்தில் எவருக்கும் தெரியவில்லை. கதை வளர, வளரத்தான் உண்மை என்ன என்பதே தெரிய வருகிறது. கதையில்தான் மேனர்ஸை பார்த்து ஏமாறுகிறோம் என்றில்லை, நிஜ வாழ்க்கையிலும் pleasant mannersஐக் கண்டு நிறைய பேர் ஏமாந்து போகிறார்கள். திருமணத்திற்குப் பெண் கேட்டு வரும் எத்தனை குடும்பங்கள் இதமாக, பதமாக பழகுகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அது வெறும் நடிப்பு, அதிலுண்மை இல்லை என்பது நமக்குத் தெரியாமல் போகிறது. திருமணம் முடிந்து நம் வீட்டுப் பெண் அவர்கள் வீட்டு மருமகளாக மாறிய பின்புதான் அவர்களுடைய கொடுமைக்கார சுயரூபம் வெளிப்படும் பொழுதுதான் நாம் ஏமாந்துவிட்டோம் என்றே புரிகிறது. இந்தத் தவற்றை யார்தான் செய்யாமல் இருக்கிறார்கள்? எல்லோரும்தான் செய்கிறார்கள். பணக்காரர்களை எட்ட இருந்து பார்க்கும் பொழுது சாதாரண மக்களால் அனுபவிக்க முடியாத சௌகரியங்களை எல்லாம் பணக்காரர்கள் அனுபவிப்பதைப் பார்க்கிறோம். இதனால் பணபலம் உள்ளவர்கள் எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு வந்துவிடுகிறது. இது உண்மையா என்று விசாரித்தால், உண்மையில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

The Indian Express News Paper Companyயின் முதலாளியான ராம்நாத் கோயங்கா இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவரிடம் பண பலமும், அரசியல் பலமும் நிறையவே இருந்தன. 1952இல் நடந்த லோக்சபா தேர்தலில் திண்டிவனத்தில் ஒரு M.P. electionக்குத் தேர்தலில் நின்றார். அவருடைய பண பலம், அரசியல்

பலம் என்று இந்த இரண்டையும் கருதிய அரசியல் கட்சிகள் எல்லாம் அவர்தான் தேர்தலில் ஜெயிப்பார் என்று திடமாக நம்பினர். அவர் பிரச்சாரத்திற்கு ஹெலிக்காப்டரில் வந்தார். ஹெலிக்காப்டரிலிருந்து பிரசார பிரசுரங்களை ஊர் முழுவதும் கொட்டினார். இந்த அளவு அவர் பகட்டாக நடந்துகொண்ட பொழுது வெற்றி அவருக்குத்தான் என்று அரசியல் கட்சிகள் முடிவே செய்துவிட்டனர். ஆனால் இறுதியில் வந்த தேர்தல் முடிவுகள் எல்லோரையும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியது. கோடீஸ்வரர் கோயங்கா ஜெயிக்காமல் உள்ளூர் வன்னிய வேட்பாளர்தான் ஜெயித்தார். என்னதான் கோயங்கா கோடீஸ்வரராக இருந்தாலும் ஜாதியில் அவர் வேறுபட்டவர். அதனால் உள்ளூர் மக்களிடையே அவர் எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்காது என்பதையே அரசியல் நிபுணர்கள் எல்லாம் மறந்தே போய்விட்டனர். இதனால் என்ன ஆயிற்று? ஜாதி பலத்தை மட்டும் காரணமாக வைத்து சாதாரண உள்ளூர் வேட்பாளர் கோடீஸ்வரர் கோயங்காவை தோற்கடித்தார். ஆகவே தோற்றத்தை நம்பி, அதுவே உண்மை என்று செயல்படுகின்றவர்கள் எல்லோரும் பெரிய தவறு செய்யக்கூடிய ஆபத்திற்கு வந்துவிடுகிறார்கள். இதே ஆபத்து ஆன்மீகத்திலும் இருக்கிறது. செய்திதாள்களில் போலி சாமியார்களைப் பற்றி நிறையவே கேள்விப்படுகிறோம். இவர் போலி, அவர் போலி என்று செய்திகள் வரும் பொழுது உண்மையான பக்தர்கள் கடும் அதிர்ச்சிக்குள்ளாகிறார்கள். ஒரு ஆசிரமத்திற்குண்டான வெளித் தோற்றம் எல்லாம் இருக்கின்றன. வருபவர்களுக்கு இந்த வெளித் தோற்றம் மட்டும்தான் தெரிகிறது. தோற்றம் சரியாக இருக்கும் பொழுது எல்லாம் சரியாக இருக்கும் என்று மக்கள் வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் திரை மறைவில் என்ன நடக்கிறது என்பதை யாரும் அறிவதில்லை. அது ஒரு நாள் வெளிச்சத்திற்கு வரும் பொழுது பக்தர் குழாம் அலறுகிறது. இப்படி தோற்றம் வேறு, உள்ளிருக்கும் ஆன்மீகம் வேறு என்பதைப் புரிந்துக் கொள்ள தோற்றத்தை உதறிவிட்டு உள்ளிருப்பது என்ன என்று பார்க்கும்



அளவிற்கு ஒரு கூர்மையான அறிவு வேண்டும். அது எல்லோருக்கும் இருப்பதில்லை. விபூதியும், காவியும் அணிந்து ஆன்மீகப் புலமை நிறைந்த சொற்பொழிவை ஆற்றிவிட்டால் அறிவு மேன்மையை ஆன்மீகப் புனிதமாக மக்கள் புரிந்து கொள்கிறார்கள். இப்படி அறிவு கூர்மைக்கும், ஆன்மீகப் புனிதத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை. ஆனால் இல்லாத சம்பந்தம் இருப்பதாக நம்புகின்றவர்கள் எத்தனையோ பேர் இந்த நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இப்படி மூடநம்பிக்கைக்கு பலியாகி கொண்டுத்தான் இருக்கிறார்கள். பேச்சுக்கும், செயலுக்கும் சம்பந்தமே இல்லை என்பது common sense உடைய எல்லோரும் தெரிந்து கொண்டிருப்பதுதான். இருந்தாலும் ஒவ்வொரு சமயம் தேர்தல் வரும் பொழுதும் வேட்பாளரின் பேச்சு சாதுர்யத்தில் மயங்கி, அவர் சொன்னதை செய்வார் என்று மக்கள் ஓட்டுகளை வழங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். நம் நாட்டிலாவது படிப்பறிவு இல்லாத மக்கள் அதிகம். ஆனால் அமெரிக்காவிலும் மக்கள் இதே மாதிரிதான் அறிவில்லாமல் வாக்காளரின் பேச்சால் கவரப்பட்டு அவருக்கே நிறைய ஓட்டுகளை போடுகிறார்கள். அமெரிக்காவில் ரானல்டு ரீகன் என்ற அரசியல்வாதி இரண்டு முறை அதிபராக இருந்தார். பட்ஜெட்டை balance செய்கிறேன் என்று பேசி பதவிக்கு வந்தவர் அவர். இரண்டாவது முறை தேர்தல் பிரச்சாரம் செய்யும் பொழுது பணக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரிகளைக் குறைக்கிறேன். ஆனால் அதே சமயத்தில் பட்ஜெட்டில் பற்றாக்குறை வராமல் balanceம் செய்கிறேன் என்று பிரச்சாரம் செய்தார். இப்படி வரியையும் குறைத்து, பட்ஜெட்டில் நிதிப் பற்றாக்குறையும் வராமல் பார்த்துக் கொள்கிறேன் என்று ஒருவர் பிரச்சாரம் செய்கிறார் என்றால், அதை நம்பி அந்த நாடு முழுவதுமே அவருக்கு வாக்களித்து அவரை இரண்டாவது முறையும் அதிபர் ஆக்குகிறார்கள் என்றால் படிப்பறிவு நிறைந்த அமெரிக்க மக்கள் உண்மையில் எவ்வளவு பெரிய தவறு செய்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.

மூடநம்பிக்கைகள் மூன்று வகையாக தோன்றுகின்றன என்று நான் ஆரம்பத்தில் பேசினேன். ஆனால் என் தகப்பனார் அவற்றை மேலும் பலவாரியாகப் பிரிக்கிறார். அவை என்னவென்று இப்பொழுது பார்ப்போம். இருப்பதிலேயே மிகப்பெரிய மூடநம்பிக்கையாக அவருக்குத் தெரிவது சுயநலத்திலிருந்து எழுகின்ற மூடநம்பிக்கையாகும். ஒரு ஸ்தாபனத்திற்கு சேவை செய்ய வருவதாக சொல்கின்றவர் தன்னையே அந்த ஸ்தாபனமாக எடுத்துக் கொண்டு, செய்கின்ற சேவையெல்லாம் தனக்கே வந்து சேர வேண்டும் என்று எதிர்பார்ப்பார். அரசியல்வாதிகள் இதைத்தான் செய்கிறார்கள். நாட்டிற்கும், மக்களுக்கும், தொகுதிக்கும் சேவை செய்ய விரும்புவதாகச் சொல்லித்தான் அவர்கள் ஓட்டு கேட்கிறார்கள். ஆனால் பதவிக்கு வந்தவுடன் நாடு, மக்கள், தொகுதி என்று எல்லாமே மறந்து போகிறது. இப்படித் தன்னையே நாட்டிற்கும், மக்களுக்கும், தொகுதிக்கும் சமமாக வைத்துக் கொண்டு, எல்லா சேவையும் தனக்கே வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இவர்கள் என்ன தவறு செய்கிறார்கள் என்பதை நாம் சுட்டிக்காட்டக்கூட முடியாது. சுட்டிக்காட்டினாலும் புரிந்து கொள்ளும் இடத்திலும் அவர்கள் இல்லை. அந்த அளவிற்கு அவர்கள் செய்யும் தவற்றோடு ஒன்றியிருப்பதால் அவர்களே தவறாக மாறி நிற்கின்றார்கள். இப்படி செய்யும் தவற்றோடு இந்த அளவிற்கு ஒன்றி இருக்கும் பொழுது அவர்களை நாம் எப்படித் திருத்த முடியும். அவர்கள்தான் நம்மை திருந்தச் சொல்வார்களே தவிர நாம் அவருக்கு எந்த அறிவுரையும் வழங்க முடியாது.

இரண்டாவதாக, மூடநம்பிக்கையை கடைப்பிடிப்பது வெறும் பழக்கம் என்றாலும் ஏதோ பெரிய லட்சியத்தைக் கடைப்பிடிப்பதாக நினைப்பது பெரிய மூடநம்பிக்கை என்கிறார். இந்நாட்டில் ஆச்சாரமானவர்கள் இதைத்தான் செய்கின்றார்கள். அவர்கள் சொல்கின்ற ஸ்லோகங்கள், கடைப்பிடிக்கின்ற விரதங்கள், மற்ற சடங்கு, சம்பிரதாயங்கள் என்று எல்லாமே பழக்கத்தின் அடிப்படையில்



எழுந்தவைதான். இருந்தாலும் அவர்களைக் கேட்டால் ஏதோ பெரிய இலட்சியமயமான வேலையைச் செய்வதாக பெருமையாகப் பேசிக் கொள்வார்கள்.

மூன்றாவதாக, கடந்த காலத்தில் சாத்தியமானது இப்பொழுதும் பலிக்கும் என்று அறிவே இல்லாமல் எதிர்பார்ப்பது. இத்தகைய முட்டாள்தனமான செயல்பாட்டை சில பேரிடம் இன்னமும் பார்க்கலாம். படித்த பெண்கள் வேலைக்குப் போவது சகஜமாகிவிட்ட இந்த காலத்தில்கூட தனக்கு வருகின்ற மனைவி மிகவும் படித்தவளாக இருந்தாலும், ‘‘அவள் வேலைக்குச் செல்வது தனக்கிஷ்டமில்லை, அதனால் வீட்டோடு இருக்க வேண்டும்’’ என்று கண்டிஷன் போடும் மணமகன்கள் இன்றும் உண்டு. தாழ்த்தப்பட்ட ஜாதியை சேர்ந்த கூலி வேலை செய்யும் தொழிலாளர்களை துச்சமாக நடத்தி வேலை வாங்கியது 1970க்கு முன் பலித்தது. அதே ஏதேச்சதிகார அணுகுமுறையைப் பின்பற்றி இன்றைய கால அளவில் தேவையில்லாத பிரச்சினைகளை உருவாக்கி கொள்கின்ற மானேஜர்கள் உண்டு. காதல் திருமணங்கள் இன்று நம் நாட்டில் மிகவும் சகஜமாகிவிட்டன. I.T. நிறுவனங்களில் வேலை செய்கின்ற இளம் ஆண்களும், பெண்களும் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற வித்தியாசமே இல்லாமல் சுதந்திரமாகப் பழகி, மணமேடையில் கணவன், மனைவியாக அமர்வதற்கு சுலபமாக தயார் ஆகிவிட்டார்கள். வெளியூரில் வசிக்கும் பெற்றோர்களுக்கு இது மிகவும் அதிர்ச்சியான செய்தியாக வருகிறது. இவர்கள் சண்டை போட பிள்ளைகள் இருக்கும் இடத்திற்குக் கிளம்பி வருவதற்கு முன்னேயே சக ஊழியர்கள் எல்லாம் சேர்ந்து காதல் ஜோடிகளுக்கு திருமணமே நடத்தி முடித்துவிடுகின்றனர். மேலும் அதிர்ச்சிக்காளாகும் பெற்றோர்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்று ஊர் திரும்புகின்றனர். இளைஞர் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளும், மனோபாவங்களும் முற்றிலும் மாறி இருக்கின்றன என்பதையே புரிந்து கொள்ளாமல் தங்களுடைய பழைய நினைப்பிலேயே

பெற்றோர்கள் ஊறியிருப்பதால் வருகின்ற ஏமாற்றம் இது.

நான்காவதாக, சிம்பாலிக்காக இருப்பதை அதையே உண்மையாக எடுத்துக் கொள்வது. இத்தவற்றை நிறைய பேர் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் திருமண சம்பந்தத்திற்கு அடையாளமாக விளங்கிய தாலி, மோதிரம் போன்றவைகள் உண்மையிலேயே திருமணத்திற்குண்டான அன்பின் வெளிப்பாட்டுச் சின்னங்களாக அமைந்தன. ஆனால் இன்று அப்படியெல்லாம் சொல்ல முடியுமா? திருமணத்திற்குரிய எல்லா வெளி அடையாளங்களும் இரு தம்பதியரிடையே காணப்பட்டாலும், ஆனால் திருமணத்திற்குரிய அன்போ, பாசப்பிணைப்போ அத்தம்பதியரிடையே இல்லாமல் இருப்பதை நிறையவே பார்க்கலாம். தாலி கட்டிய ஒரே காரணத்தினால் மட்டும் ஒரு ஆண்மகன் கணவனாகிவிட முடியாது. அந்தக் கணவன் என்ற இடத்திற்குரிய அன்பு, பொறுப்பு, அக்கறை எல்லாம் அந்த ஆண்மகனிடம் உண்மையாக வெளிப்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்த திருமணத்தில் உண்மையிலேயே அர்த்தம் இருக்கும். ஆனால் பல ஆண்கள் அன்போ, அக்கறையோ, பொறுப்போ இல்லாமல் பெயரளவிற்குத்தான் கணவன்மார்களாக செயல்பட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் மாட்டிக் கொண்ட பல பெண்களும் கட்டிய தாலிக்கு மதிப்புக் கொடுத்து, ஊருக்கும், உலகத்திற்கும் பயந்து, ‘பிடிக்கிறதோ, இல்லையோ 2 குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டோம், குழந்தைகளின் சந்தோஷத்திற்காக அவருடனேயே வாழ்க்கையை ஓட்டுவோம்’ என்று பட்டும் படாத ஒரு போலி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்கள்தான் இப்படி என்றாலும், பெண்கள் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை. 200 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட P & P கதையிலேயே நாம் இதைப் பார்க்கலாம். அக்கதையில் திருமதி. பென்னட் அவர்கள் திரு. பென்னட்டுடன் சேர்ந்து 5 பெண்களைப் பெற்றுவிட்ட பின்பும் லாங்பர்ன் எஸ்டேட் எண்டெயில்மெண்ட்டாக இருப்பதால்தான் கவலைப்பட



வேண்டியிருக்கிறது. மற்றபடி எது நிகழ்ந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை என்று திரு. பென்னட் அவர்களிடையே வெளிப்படையாகப் பேசுகிறாள். அதாவது அவர் இறந்துவிட்டால், சொத்து காலின்ஸ் கைக்கு போய்விடுமே என்றுதான் தான் வருத்தப்படுவதாகவும், மற்றபடி அவர் இறந்து போவதைப் பற்றி தனக்கு எந்தவித வருத்தமும் இல்லை என்றும் வெளிப்படையாகப் பேசுகிறார். 20 வருட திருமண வாழ்க்கைக்குரிய அன்பின் அடையாளமா இது? இதைக் கேட்ட பின்பும் இந்தப் பெண்மணியுடன் அவர் தொடர்ந்து குடும்பம் நடத்துகிறார் என்றால், அதை நம்மால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? இப்படித்தான் ஊரார் கணவன், மனைவியாக பார்த்தாலும் மனதில் ஒட்டோ உறவோ இல்லாமல் போலியாக ஊருக்கும், உறவுக்கும் பயந்து அல்லது பிள்ளைகளுக்காகவே எத்தனையோ பேர் கணவன், மனைவியாக போலியாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். இதை மனதில் வைத்துதான் அன்னை அவர்களிடம் திருமணத்தைப் பற்றி கருத்து கேட்ட பொழுது அவர் கீழ்கண்டவாறு சொன்னார்.

எனக்குத் தாலிக் கட்டிக் கொள்வதோ, மோதிரம் மாற்றிக் கொள்வதோ, ஒரு பொருட்டேயில்லை. அன்பின் அடிப்படையில் இருவர் இணைந்தால் அதையே நான் திருமணமாக எடுத்துக் கொள்கிறேன். அந்த அன்பு இருக்கும்வரை அவர்கள் சேர்ந்துதான் இருப்பார்கள். அந்த அன்பு முறியும் பொழுது வெறும் சம்பிரதாயத்திற்காகவும், ஊருக்கும், உலகத்திற்கும் பயந்து அவர்களைக் கணவன், மனைவியாகத் தொடர்ந்து இருக்க வைப்பதை நான் திருமணம் என்று ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று பதிலளித்தார். என்னதான் நாம் அன்னை பக்தர்களாக இருந்தாலும், அன்னையினுடைய இந்த புரட்சிகரமான பதிலை நம்மால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா? அன்னை ஏதோ விஷயம் தெரியாமல் சொல்லிவிட்டார்கள். புருஷன் நாம் எதிர்பார்ப்பது போல் இல்லை என்றால் நாம் உதறி தள்ளிவிட முடியுமா? அப்புறம் பிள்ளைகள்

வாழ்க்கை என்னாவது? சமூகத்தில் என் மதிப்பு என்னாவது? இதுதான் என் தலைவிதி என்றால் வாழ்ந்துதானே ஆக வேண்டும் என்று இப்படி உள்ளுக்குள்ளேயே புழுங்கி ஒரு மாதிரி சமாதானம் ஆகிறோம்.

இம்மாதிரியே வெளி அடையாளங்களை வைத்து உள்ளிருக்கும் சாரம் இருக்கிறதென்று மக்கள் தானே வைத்துக் கொள்கிறார்கள். ஒருவர் பட்டப்படிப்பு படித்திருந்தாலோ அல்லது ஆங்கிலம் சரளமாகப் பேசினாலோ அவரை அறிவாளி என்று நமக்கு நினைக்கத் தோன்றுகிறது. இம்மாதிரியே மேடையில் நன்றாகப் பேசத் தெரிந்தவர்களை சிறந்த அரசியல் தலைவர் என்று மக்கள் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் பல சமயங்களில் பெரிய பட்டப் படிப்புப் படித்திருந்தாலும் இருக்க வேண்டிய அறிவு இருப்பதில்லை என்று நாம் பார்க்கிறோம். அதாவது மேலோட்டமாகத்தான் படிக்கிறார்களே தவிர அறிவைக் கூர்மையாக்கும் வண்ணம் ஆழ்ந்தப் படிப்பு படிப்பதில்லை என்று தெரிகிறது. இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது பேச்சு வன்மைக்கும், அரசியல் தலைமைக்கும் நேரடி தொடர்பே இல்லை எனத் தெரிகிறது. இம்மாதிரி சமூகத்தில் தொடர்பில்லாத எத்தனையோ விஷயங்களை தொடர்பு வைத்துக் கொண்டு பார்க்கும் பொழுது நாம் பல அறிவில்லாத வேலைகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். உதாரணமாக ஒரு பெண் வெள்ளை வெளேரென்றிருந்தால், அவள் சாதாரணமாகவே சிறந்த அழகியாகக் கருதப்படுகின்றாள். அதே சமயத்தில் ஒரு பெண் கருப்பாக இருக்கிறாள், ஆனால் அதே நேரத்தில் முகம் லட்சணமாக இருக்கிறதென்றாலும், அவள் அழகி என்று யாருமே கருதுவதில்லை.

ஒரு முதலாளி வீட்டுப் பெண் படித்தவள், பண்பு நிறைந்தவள், நன்றாகப் பேசப் பழகத் தெரிந்தவளாக இருந்தாலும் நிறத்தில் கருப்பாக மட்டும் இருந்துவிட்டால், அதே சமயத்தில் அந்த வீட்டிலேயே வேலை செய்யும் பெண் நல்ல சிகப்பாக அமைந்துவிட்டால், பெண்



பார்க்க வருகின்ற ஆண்மகன் எல்லாம் முதலாளி மகளைவிட வேலைக்காரப் பெண்ணையே அதிகம் விரும்புவார்கள். முதலாளி மகளுடைய படிப்பு, பண்பு, பழகும் முறை என்று எதுவுமே வேலைக்காரப் பெண்ணுடைய வெண்மையான நிறத்திற்கு முன்னால் எடுபடாமல் போகும். இந்தளவிற்கு நிறமோகம் நம்முடைய அறிவை மழுங்க அடிக்கிறது. இப்படி சமூகத்தில் இருக்கின்ற மூடநம்பிக்கைகளை மூடநம்பிக்கைகளாக உணர்வதேயில்லை. ஆனால், அதே சமயத்தில் அடுத்தவருடைய மூடநம்பிக்கைகளை மட்டும் கண்டு பரிகாசம் செய்கிறார்கள். சிகரெட் பிடித்து உடல் நலனைக் கெடுத்துக் கொள்ளும் ஒருவர், சீட்டு விளையாடி பணத்தை இழக்கின்ற அடுத்தவரைக் கேலி செய்வார். இப்படி சீட்டாடி பணத்தை இழப்பதுதான் அவருக்கு அறிவில்லாத செயலாகத் தெரிகிறதே தவிர இப்படி வரம்பில்லாமல் சிகரெட் பிடித்து உடம்பைக் கெடுத்துக் கொண்டு வைத்திய செலவிற்குப் பணத்தைச் செலவு செய்து கொண்டிருப்பது மட்டும் அவருக்கு அறிவில்லாத வேலையாகத் தெரிவதில்லை.

திருமண வைபவத்தில் வயதில் பெரியவர்களிடம் மணமக்கள் ஆசீர்வாதம் வாங்கிக் கொள்ளும் பழக்கம் இருக்கிறது. ஒருவர் அடுத்தவருக்கு ஆசீர்வாதம் செய்ய உண்மையிலேயே ஆன்மீகப் பக்குவம் வேண்டும். வயதில் பெரியவராக இருப்பதால் மட்டும் ஆசீர்வாதம் செய்யக்கூடிய பக்குவம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வதே ஒரு மூடநம்பிக்கையாகும். இப்படி ஆசீர்வாதம் செய்யும் பெரியவர்களில் எத்தனை பேர்கள் குடிகாரர்களாகவும், துஷ்டர்களாகவும், பெண்பித்தர்களாகவும் இருக்கின்றார்கள் என்று நமக்குத் தெரியுமா? அவர்கள் எப்படி இருந்தாலும் பரவாயில்லை, திருமண நாளில் அவரிடம் ஆசீர்வாதம் வாங்கினால்தான் திருப்தியாக இருக்கிறது என்ற நிலையில் நாம் இருக்கின்றோம். எல்லாத் திருமண வைபவங்களிலும் இப்படி ஆசீர்வாதம் செய்யும் படலமொன்று தவறாமல் நிகழ்கிறது. இப்படி ஒரு தவற்றை ஒரு

முறைப்படுத்தியே நாம் செய்யும் பொழுது சமூகம் எந்த அளவிற்கு மூடநம்பிக்கையால் நிறைந்திருக்கிறது என்று நம்மால் அறிய முடிகிறது. இதில் ஆபத்து என்னவென்றால், குடிகாரனோ அல்லது பெண் பித்தனோ மணமக்களை ஆசீர்வாதம் செய்தால், அன்றுவரை ஒழுங்காக இருந்த மணமகனுக்குக்கூட நேற்றுவரையில்லாத குடிமோகமும், பெண்மோகமும் தலையெடுக்கும். இன்று மக்களிடையே இருக்கின்ற மிகப்பெரிய மூடநம்பிக்கைகளில் ஒன்று பணத்தை வைத்துக் கொண்டு எதையும் சாதிக்கலாம் என்ற ஒரு நினைப்பு. ஒரு காலத்தில் அரசியல்வாதிகள் காசு கொடுத்தால் ஓட்டு தனக்கு விழுமென்று நம்பி செயல்பட்டார்கள். அம்மாதிரியே ஓட்டிற்காகப் பணம் வாங்கியக் குடிமகனும், வாங்கிய பணத்திற்காக கொடுத்த கட்சிக்கு ஓட்டுப் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால் இப்பொழுது எல்லா கட்சிக்காரர்களும் ஓட்டிற்காகப் பணம் கொடுக்கின்றார்கள். குடிமக்களும் எல்லாக் கட்சியிலிருந்தும் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் எந்தக் கட்சிக்கு ஓட்டு விழும் என்று தெரியாமல் போய்விட்டது. அதாவது காசு கொடுக்காவிட்டால் ஓட்டே விழாது, காசு கொடுத்தாலும் கண்டிப்பாக ஓட்டு விழும் என்று நிச்சயமாகச் சொல்லவும் முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது. அதாவது கொடுக்கவும் முடியாது, கொடுக்காமல் இருக்கவும் முடியாது என்ற நிலைக்கு இப்பொழுது அரசியல்வாதிகள் தள்ளப்பட்டுவிட்டார்கள். இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டும்? நாம் பணத்தைப் பெரியதாக மதித்தால், வாழ்க்கை இப்படித்தான் நம்முடைய பணத்தால்கூட எதுவும் செய்ய முடியாது. பணத்தை செலவு செய்து கொண்டிருக்கலாமே தவிர காரியம் நடக்காது என்று மண்டையில் அடித்தாற்போல் நமக்கு அடித்துப் புரிய வைக்கிறது.

இப்படிப் பணத்தின் மேல் அபார நம்பிக்கை வைத்துப் பலர் ஏமாறுகிறார்கள் என்றால், சமூக அந்தஸ்தை மலை போல் நம்பி, அதனால் ஏமாற்றப்படுபவரும் உண்டு. இப்படி அந்தஸ்தையே பெரிதென நினைக்கின்றவர்கள் உறவு, நட்பு, பாசம் என்றெதற்கும்



அந்தஸ்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். ஒரு அரசாங்கத் துறையில் இயக்குநர் தன்னுடைய கீழுள்ள அதிகாரியுடன் மிகவும் நெருக்கமாக, நட்பாகப் பழகினார். கீழுள்ள அதிகாரிக்கு பிரமோஷன் கொடுக்கப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த சமயம் இயக்குனருக்கு மரியாதை தலைதூக்கியது. என்னதான் கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டாலும், அவர் முறைப்படி கேட்டு வாங்கினால்தான் கௌரவமாக இருக்கும் என்ற முடிவை எடுத்துவிட்டார். கீழுள்ள அதிகாரியோ மிகவும் பண்பானவர். யாரிடமும், எதையும் கேட்டு வாங்கி அவருக்குப் பழக்கமில்லை. அதனால் இயக்குனர் எவ்வளவுதான் நட்புடனிருந்தாலும், பதவி உயர்விற்காகக் கேட்கப்போவதில்லை என்றிவர் முடிவு செய்திருந்தார். இதனால், ஒன்றரை வருட காலம் தாமதமாகி, அதன் பிறகுதான் இவருக்குப் பதவி உயர்வே கிடைத்தது. இதன் விளைவாக Chief Engineerஆக ஒய்வு பெற வேண்டியவர் Executive Engineerஆகத்தான் ஒய்வு பெற்றார். ஆனால் அந்தஸ்தைக் காரணம் காட்டி கால தாமதம் செய்த இயக்குனரோ நல்ல ஆரோக்கியமாக இருந்தவர் திடீரென்று யாருமே எதிர்பார்க்காத வகையில் மாரடைப்பு வந்து இறந்து போனார். பதவி இறுமாப்பில் யாருக்காகவும், எதற்காகவும் இறங்கி வரமாட்டேன் என்று பிடிவாதம் செய்தவருக்கு வாழ்க்கை இப்படி ஒரு மரண அடி வழங்குமென்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால் வாழ்க்கை அப்படித்தான் செய்தது.

அன்னை ஆசிரமத்திலிருந்த பொழுது ஒரு அன்னை பக்தர் பகவான் தங்கியிருந்த அறைக்கு ஒரு அழகான கார்பெட் வாங்கி அன்பளிப்பாகக் கொடுக்க விரும்பினார். இது பற்றி ஆசிரம நிர்வாகியிடம் பேசிய பொழுது அவர், இவருக்கு அதிர்ச்சி தரும் வகையில், "ஏன் இந்த வீண் செலவு செய்கிறாய்? பணத்தை பேசாமல் என்னிடம் கொடு. நான் உருப்படியாக ஏதேனும் செலவு செய்து கொள்கிறேன்" என்று பதிலளித்தார். அதிர்ச்சியில் ஆழ்ந்த பக்தர்

பேசாமல் விலகிப் போனார். மறுநாள் மீண்டும் ஆசிரமத்திற்கு வந்த பொழுது நிர்வாகியின் அறைக்கு வெளியே நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதைக் கண்டு என்னவென்று விசாரித்தார். அவர்களோ, “நிர்வாகிக்கு நேற்றிரவு முதல் விடாமல் விக்கல் வருகிறது. கடைசி நேரம் வந்துவிட்டது போல் தெரிகிறது. அதனால்தான் அவரைப் பார்த்துவிட்டுப் போக நிற்கிறோம்” என்றார்கள். அன்பருக்கு விஷயம் புரிந்துவிட்டது. அவர் உடனே அன்னையிடம் மானசீகமாக தன் புனித பக்தியை உதாசீனம் செய்த அன்பரின் அறியாமையை மன்னிக்க வேண்டினார். உடனே விக்கல் குறைந்து, அன்று மாலைப் பொழுதளவில் நிர்வாகி சகஜ நிலைமைக்குத் திரும்பிவிட்டார். இப்படி அறியாமையால் செயல்படுகின்றவர்களை அவர்கள் போக்கிலேயே விடுவதுதான் நல்லது. இதனால்தான் கீதையில், “மூடநம்பிக்கையோடு செயல்படுபவர்களை பலவந்தமாக நாம் மாற்ற முயலக் கூடாது. புதியதும் புரியாமல், பழையதையும் விட முடியாமல் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவார்கள்” என்று எச்சரிக்கிறது. அன்னையிடம் வந்தவர்களுக்கு எத்தனையோ பழைய சம்பிரதாயங்கள் தேவையில்லை. ஆனால் தாமாகவே அவை தேவையில்லை என்பதை உணர்ந்து, அவற்றை விடுகின்ற பக்குவம் வராத வரையிலும் அவற்றை நம்பிக் கொண்டிருப்பவர்களை நாம் மாற்ற முயலக்கூடாது. உதாரணமாக கோயிலுக்குப் போகாதே, பிரசாதம் வாங்காதே, உன் பிள்ளைக்குப் பூநூல் அணிவிக்காதே, பெண்ணிற்கு மஞ்சள் நீராட்டாதே, இதெல்லாம் அன்னை பக்தர்களுக்குத் தேவையில்லை என்று விஷயம் தெரிந்த அன்னை பக்தர்கள் விவரமில்லாத பக்தரிடம் எடுத்துச் சொன்னால், அவர்களால் இதை சந்தோஷமாக எடுத்துக் கொள்ள முடியுமா? இப்படி ஒருவர் சொன்னால், அவர்களுக்கு அன்னை மேல் பயம் வந்து விலகித்தான் போவார்களே தவிர, இப்படிச் சொல்வதால் நாம் எதிர்பார்க்கின்ற பலன் வராது.

வாழ்க்கையின் அடிப்படை போக்கிற்கு எதிரான ஒரு புதிய



கொள்கை நமக்குப் பிடித்திருப்பதால் மட்டும் நாம் அதை அளவு கடந்து வலியுறுத்தினால் இது தலைகீழ் விளைவுகளைக் கொண்டு வரும். தமிழ்நாட்டில் தம்பி, அக்காள் மகளை திருமணம் செய்து கொள்வது இன்றும்கூட பரவலான ஒரு பழக்கமாக இருக்கிறது. 1920இல் இந்த பழக்கம் இன்னும் எவ்வளவு பரவலாக இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அந்த நாட்களில் ஜோதிடம் சொல்லிக் கொண்டிருந்த ஒருவர் பல பேரிடம் அக்காள் மகளை மருமகளாக ஏற்றுக் கொள்வதை நிராகரித்துப் பேசினார். இவருடைய மறுப்பால் இப்படி நடைபெறவிருந்த பல திருமணங்கள் நடைபெறாமலேயே போய்விட்டன. ஆனால் யாருமே எதிர்பார்க்காத வண்ணம் இவருடைய சொந்த மகனுக்கே இவருடைய பேத்தியைத் திருமணம் செய்து வைக்கும் கட்டாயம் ஏற்பட்டது. இதைப் பற்றி அவரிடமே கேட்ட பொழுது, “ஆமாம், எல்லோருக்குமே வேண்டாம் என்றேன். ஆனால் நானே இதில் மாட்டிக்கொள்வேன் என்று எதிர்பார்க்கவே இல்லை” என்று வெட்கத்துடன் பதிலளித்தார். காந்திஜி அவர்களும் இதே தவற்றைத்தான் செய்தார். வன்முறை என்பது வாழ்க்கையில் பிரதானமான ஒன்று. அதுவும் அன்னியன் ஆக்கிரமித்திருக்கிறான், அவனை வெளியேற்ற வேண்டுமென்றால், ஆயுதம் ஏந்தி அவனை விரட்டியடிப்பது மக்களின் ஒரு இயற்கையான செயல்பாடு. இந்த இடத்தில் காந்திஜி அவர்கள் குறுக்கிட்டு, மக்களிடம், “ஆயுதம் ஏந்த வேண்டாம். ஒத்துழையாமை போராட்டத்தின் மூலம் ஆங்கிலேயனை வெளியேற்றலாம்” என்று மக்களுக்கு அறிவுறுத்தினார். இப்படி இயற்கையாக எழும் மக்களுடைய வன்முறை உணர்வுகளை அடக்கி, செயற்கையாக அவர்களை அமைதியாக செயல்பட வைத்தது ஒரு கால கட்டம் வரைதான் பலித்தது. ஆனால் ஆங்கிலேயன் வெளியேறிய பின்பு இதுநாள் வரை அடக்கி வைத்திருந்த வன்முறை இந்து முஸ்லீம்களுக்கிடையே வெடித்து பயங்கர இனக்கலவரம் மூண்டு லட்சக்கணக்கில் மக்கள் உயிர் இழந்தார்கள். காந்திஜி பெரிய மகான் என்பதில் சந்தேகமே இல்லை. அவர் விரும்பி இருந்தால்

ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஆகியிருக்கலாம். ஆனால் இவை வேண்டும் என்று அவர் கேட்கக்கூட இல்லை. அந்த அளவிற்கு பதவி ஆசையிலிருந்து விடுபட்டிருந்தார். இவ்வளவு பெரிய மகானாக இருந்தால்கூட வாழ்க்கையில் பரவலாக இருக்கின்ற வன்முறையை உதாசீனம் செய்ததை வாழ்க்கையே ஏற்றுக் கொள்ளாமல் அதனுடைய எதிர்ப்பை இப்படிக் கடுமையாக தெரிவித்துள்ளது.

இப்பொழுது நாம் அன்னை அன்பர்களுக்கு வருவோம். நாம் எதைச் செய்தாலும் அதை ஜீவனோடு செய்தால்தான் அந்த வேலையில் அன்னை சம்பந்தப்பட்டுக் கொள்வார்கள். புஷ்பாஞ்சலியாக இருந்தாலும், தினசரி தியானமாக இருந்தாலும், தியான மையத்திற்கு வருவதாக இருந்தாலும் நாம் ஈடுபாட்டுடன் இவற்றைச் செய்தால்தான் அன்னையின் அருளும் அவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும். ஈடுபாடு போய் வெறும் இயந்திரதன்மையாக அதை வெறும் பழக்கமாக நாம் எத்தனை ஆண்டுகள்தான் செய்தாலும் அதற்கு நாம் எதிர்பார்க்கும் பலனிருக்காது. அன்பர் ஒருவர் அன்னை இருந்த நாட்களில் ஒரு தரிசனம் தவறாமல், இருபது வருடம் தவறாமல் வந்தார். இத்தனை வருடங்கள் தவறாமல் வந்தவருக்கு வாழ்க்கை சிறப்பான பரிசுகளை அளித்திருக்க வேண்டும். ஆனால் வாழ்க்கை அப்படிச் செய்யவில்லை. ஆசிரம பள்ளியில் ஹையர் கோர்ஸ் வரை படித்த அவர் பையனை வெளியிலுள்ள பள்ளியில் எட்டு அல்லது ஒன்பதாம் வகுப்பில் சேர்க்க வேண்டியதாயிற்று. ஒரு மகளுக்குத் திருமணமே ஆகவில்லை. மற்றொரு மகள் இஸ்லாமியரைத் திருமணம் செய்து கொண்டாள். அவர் செய்த சேவைக்கு வாழ்க்கையில் இவருக்குயர்ந்த பதவியுயர்வு கிடைத்ததே தவிர ஈடுபாடில்லாமல் நெடுநாள் வைத்திருந்த ஆசிரமத் தொடர்பிற்கும் உரிய பரிசும் கிடைத்தது. ஆகவே நாமும் இதே தவற்றைச் செய்யாமல் இருக்க வேண்டும். தியானம் வருகிறதோ, இல்லையோ தியானத்திற்கென்று குறித்த நேரத்தில் உட்கார நாம் ஆரம்பித்தால், அது நாளடைவில் ஜீவனற்றப் பழக்கமாக மாறிவிடும்



ஆபத்திருக்கிறது. தியான மையத்திற்கு ஒரு நாள்கூட தவறாமல் வருகிறேன் என்று பெருமைப்பட்டுக் கொள்பவர் இருக்கலாம். அதையும் இப்படி ஜீவனில்லாமல் செய்தால் விளைவுகள், தரிசனத்திற்கு விடாமல் வந்த அன்னை அன்பருக்கு இருந்ததுபோல்தான் இருக்கும். ஆகவே அந்தத் தவற்றைச் செய்யாமல், செய்வதை எல்லாம் ஜீவனோடு செய்யுங்கள். ஜீவனில் ஆர்வம் குறைந்து போனால், ஏன் குறைந்தது என்று கண்டுபிடித்து, மறைந்த ஆர்வத்தை மீண்டும் கொண்டுவர முயற்சி செய்யுங்கள். அதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்பட்டால் எடுத்துக் கொள்ளுங்கள். இதனால் ஒன்றும் பெரிய தப்பு வந்துவிடாது. ஆகவே எதைச் செய்தாலும் ஜீவனோடு செய்வதுதான் மூடநம்பிக்கை-களினின்று தப்பிக்க சிறந்த வழி என்று சொல்லி என் சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன்.

*முற்றும்*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***சிருஷ்டியை பிரம்மமாகக் காண்பது இதி, இதி.***

***சிருஷ்டியில் பிரம்மத்தைக் காண முயல்வது நெதி, நெதி.***

***மனம் இவற்றையே காணும்.***

***சத்திய ஜீவியம்***
***பிரம்மத்தில் சிருஷ்டியையும் சிருஷ்டியில் பிரம்மத்தையும் காணவல்லது.***

# பெண்ணின் பெருமை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

நாடு சமூகத்தால் முன்னேறுகிறது. சமூகம் அமைதியால் வாழ்கிறது, செயல்படுகிறது. அமைதி வளர்ந்து நல்ல சமூகப் பண்புகள் உற்பத்தியாகின்றன. அவற்றைக் குடும்பங்கள் காத்து வளர்க்கின்றன. **குடும்பத்தில் அவற்றைப் பேணுவது பெண்மையின் தாய்மை**. குடும்பத் தலைவனான ஆண் பொருள் ஈட்டி, காத்து, தலைமை தாங்குகிறான். அவன் செயலைச் சிறப்படையச் செய்வது அவள். அவளுடைய உயர்வும், உள்ளத் திண்மையையும் அறிந்த பொழுது அவளை அவனே தலைவியாக ஏற்க முடிவு செய்கிறான். ஆன்மீக வளர்ச்சியுடைய ஆண் அவள் ஆத்மாவின் திண்மையை அறிகிறான். அதன் உயர்வு தெய்வீக உயர்வென உணர்ந்து தானே அவளுக்குச் சரணமடைய முடிவு செய்கிறான். தத்துவரீதியாக ஈஸ்வரன் சக்திக்குச் சரணடைந்து, வாழ்வை அற்புதமாக மாற்றுகிறான் எனக் கூறப்படுகிறது.

- **ஆன்மீகத்தை நாடுகிறவர்கள் அமரத்துவமுடையவர்கள்.**
- **அதற்கடுத்தாற்போல் ஆன்மீகப் பண்பை வாழ்வில் பயில விரும்புவோர் ஆதர்ச புருஷர்களாவோர்.**

அவர்கள் வாழ்வில் சமூகத்தின் முன்னோடிகள். இலட்சியத்தை வாழ்வாக வாழ்ந்தவர். அது போன்ற குடும்பங்கள் ஏற்பட்டால் ஆன்றவிந்த சான்றோர் வாழும் ஊர் நம்மூராகும். பிணக்கொழிந்த வாழ்வு, அமைதி பொலியும் வகை வளம் நிறைந்து செழிக்கும். இந்திய ஆன்மீகம், குறிப்பாக ஸ்ரீ அரவிந்தம் அத்தகைய குடும்பங்களை உற்பத்தி செய்யவல்லது. அந்த வாய்ப்பு மற்ற கலாச்சாரங்கட்கும், நாடுகட்கும் இல்லை. மேலைநாடுகளில் வசதி பெருகியுள்ளது. வசதி பண்பாகாது, மன வளமாகாது, மன வளத்தைக் கடந்த ஆன்மீக உயர்வாகாது. இந்திய மண் அப்பெருமையுடையது.



பிரிட்டன் உலகை ஆண்டது. அதற்கு அதன் வியாபாரம் காரணம், கடற்படையும் ஒரு காரணம். ஒரு நாடு உயர அல்லது தாழ எல்லாத் துறைகளிலிருந்தும் காரணம் உண்டு. பிரிட்டிஷார் உயர்ந்த நாணயமுடையவர். அது அவர் வெற்றிக்கு முக்கிய காரணம். அவர்கள் சிந்தனையில் சிறந்தவர்கள். நியூட்டனை உலகுக்கு அளித்தவர். **அதுவும் ஒரு முக்கிய காரணம். சமூக ரீதியாக அவர்கள் பெண்களுக்கு அதிக மரியாதை செலுத்துவார்கள். பல பேர் உள்ள இடத்திற்கு ஒரு பெண் வந்தால் அத்தனை ஆண்களும் எழுந்து நின்று வரவேற்பார்கள். "என்னை மணக்க சம்மதிப்பாயா?" எனக் கேட்கும் ஆடவன் அவள் முன் மண்டியிட்டு, "என்னை மணந்து கௌரவிப்பாயா?" எனக் கேட்பான்**. பெண்கள் தவறு செய்வதை சுட்டிக்காட்டுவது, கேள்வி கேட்பது அநாகரீகம் என்பது அவர்கள் கொள்கை. நம் நாட்டில் நாம் பெரியவர்களை, அதிகாரிகளை, பதவியில் உள்ளவரை, குருமார்களை மரியாதையாக நடத்துவது போல் ஆங்கிலேயர்கள் பெண்களை மரியாதையாக நடத்துவார்கள். ஒரு நாடு பெண்ணுக்குத் தரும் மரியாதை அந்த நாட்டின் பண்பு நிலையை எடுத்துக்காட்டும். இவ்வகையில் இங்கிலாந்து சிறந்து விளங்கியது, அது உலகை ஆள ஒரு முக்கியக் காரணமாயிற்று என்பது என் கருத்து.

பெண்மையின் இரகசியம் என்ன? பெண்மைக்கு முக்கியத்துவம் எப்படி வருகிறது? ஏன் பெண்ணை நாம் அப்படி போற்ற வேண்டும்? என்ற கருத்துகளை நடைமுறையிலும், தத்துவரீதியாகவும், சூட்சுமமாகவும், சமூகத்தில் அவள் வகிக்கும் அங்கத்தின் மூலமும், பண்பிற்குரிய பாணியிலும் விவரமாக எழுதலாம். அது நீண்டு விரியும் கருத்து. அவற்றை முழுவதும் கூற ஒரு நூல் எழுத வேண்டும்.

- அவள் பிறவி புனிதமானது.
- தாய்மை அவளுக்களிக்கும் நிலை தனிச் சிறப்புடையது.

- மனிதன் இனிமையை உணர, இன்பம் துய்க்க ஏற்பட்டவள் பெண்.
- திருமணம் முக்கிய ஸ்தாபனம், அதன் முக்கிய அம்சம் பெண்.
- கல்வி நாட்டின் நிலையை நிர்ணயிக்கும். அதைப் பெற்றுத் தருபவள் பெண்.
- வருமானத்திற்குக் கல்வி போல், வாழ்வில் ஆழ்ந்த சிறப்புக்குரியதுப் பண்பு. அதை நாடு நல்ல வகையில் முழுவதும் பெற உதவுபவள் பெண்.
- அவள் வாழ்வின் பகுதி, better half பெரும் பகுதி.
- உலகம் திருமணத்தை மறக்கலாம், குடும்பத்தை அழிக்கலாம், தாய்மை நிலைக்கும்.
- பெருமுயற்சி செய்து சிறுபலன் பெற வேண்டிய இடத்தில் சிறு முயற்சியால் பெரும்பலன் பெற்றுத் தருவது பெண்மை, தாய்மை, தூய்மை.

*தொடரும்.....*

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***உலக அனுபவத்தை உள்ளே பெற முடியும்.***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## இறைவன் வரும் தருணம் - சமர்ப்பணம் செயல்படும் நேரம்

நெடுநாள் தயார் செய்து நேரம் வருவது இறைவன் வரும் தருணம். அந்நேரம் ஆயிரம் ஆண்டில் நடப்பது சிறிது நேரத்தில் நடக்கும் - காலத்தின் மூலத்தை எட்டுவது இம்முறை.

சுதந்திரம் வந்த பின் ஏழ்மையை போக்க என்ன செய்யலாம், உடனே போக்க என்ன செய்யலாம் என்ற கேள்வி அனைவருக்கும் எழுந்தது. ஒரு மனிதனைப் படிக்க வைத்துவிட்டால் அவன் முன்னுக்கு வருவான் என்று கண்டு இலவச கல்வி அமலுக்கு வந்தது. உழைப்பின் சாரமான மூலம் கல்வி. கல்வி பெற்ற நாடுகள் முன்னுக்கு வந்தன. முன்னுக்கு வந்த நாடெல்லாம் கல்வி பெற்றவை.

***உழைப்பின் சாரம் கல்வி.***
***வாழ்வின் சாரம் யோகம்.***

வாழ்வு முன்னுக்கு வர உழைக்க வேண்டும். உழைப்பு பெரும்பலன் பெற கல்வி வேண்டும்.

***கல்வியின் கருவின் மூலம் யோகம்.***

யோகம் என இங்கு நான் குறிப்பிடுவது யோக வாழ்விற்குரிய மன நிலைகள். அவை பொறுமை, நிதானம், சுறுசுறுப்பு, உஷார், நேர்மை, நாணயம், பரநலம் போன்றவை. இவை உயர்ந்த நோக்கங்கள். இவற்றை மேற்கொண்டால் வாழ்வு யோகமாகும். இக்குணங்களைப் பெற முயல்வது நன்று. முயல்வதினும் சிறந்த முறை சமர்ப்பணம்.

- **மனித செயல் இறைவன் செயலாவது சமர்ப்பணம்.**
- **சக்தி, வீரியம், தெய்வப் பிரகிருதிகளைக் கடந்த நம்பிக்கையால் செயல்படுவது சமர்ப்பணம்.**
- **காலத்தைச் சுருக்கி, இடத்தை விலக்குவது சமர்ப்பணம்.**

***பூலோக வாழ்வை இறைவன் வரும் தருணமாக்குவது சமர்ப்பணம்.***
***உலக வாழ்விற்குக் கல்விபோல, உயர்ந்த வாழ்வுக்குரியது சமர்ப்பணம்.***

## கேள்வி

கல்வி நாம் பயில்வது. கேள்வி கேட்டு அறிவது. குருவிடம் கேட்டு அறிவது கேள்வி. காதால் ஒலியைக் கேட்கிறோம். மனதால் சொல்லைக் கேட்கிறோம். கேட்டதை மனம் புரிந்து, புரிவதை மனம் ஏற்பது ஞானம்.

*மனிதனால் எவர் சொல்வதையும் கேட்க முடியாது.*
*தன் மனம் தன்னிடம் கூறுவதையே அவனால் கேட்க முடியும்.*

எவராலும் பிறர் கூறுவதை கேட்க முடியாது என நம்புவது அரிது.

சமர்ப்பணம் முக்கியம் எனப் பல ஆண்டுகளாக நீங்கள் சொல்வது எனக்குத் தெரியும். இன்றுதான் அதன் உண்மையை அறிந்தேன் என ஒருவர் கூறும்பொழுது இத்தனை நாள் அவர் காதில் விழுவது மனத்தில் படவில்லை எனப் பொருள். நம்மையே ஊன்றி கவனித்தால் இதன் உண்மை விளங்கும். உண்மை பேச வேண்டும், பிறர் மனத்தை அறிய வேண்டும், பரநலம் அவசியம், பண்பு சாதிக்கும், தவற்றை விலக்க வேண்டும் என்பன போன்ற பல கருத்துகளை அறிவோம். நாம் எதையும் முழுமையாகப் பின்பற்றுவதில்லை. மனம் காதில் விழுந்த சொல்லைக் கேட்டுக் கொள்ளவில்லை எனப் பொருள்.

- **சமர்ப்பணம் செய்து காதால் கேட்டால் மனம் கேட்டுக் கொள்ளும்.**
- **சமர்ப்பணம் செய்து பேசினால் கேட்பவர் காதில் மட்டுமின்றி, மனத்திலும் சொல் கேட்கும்.**
- **பிறர் நம் சொல்லைக் கேட்டு ஏற்கும்படிப் பேசுதல் நமக்கு இன்றுள்ள திறமையில்லை. சமர்ப்பணம் அதைப் பெற்றுத் தரும்.**
- **நம் சொல் சமர்ப்பணமானால் கேட்பவர் மனம் 'காது' கொடுத்துக் கேட்கும்.**
- **கேள்வி நமக்குப் பலன் தரவும், பிறருக்குப் பலன் தரும்படி அடையவும் உதவுவது சமர்ப்பணம்.**

Vol. III Issue 2 May 2013
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
N.Asokan

**கர்மயோகியின்**

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் – கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

*பாண்டியில்*
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

*சென்னையில்*
மாம்பலம் தியான மையம்,
Priams, 'Golden Wattle', கதவு எண் 36,
கோபால் தெரு, அருணா ஹோட்டல் அருகில்,
தி.நகர், சென்னை - 600 017.
✆: (044)-24347191

Vol. III Issue 2 May 2013

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## மே 2013